இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 43 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 04 – வியாழக்கிழமை 21 செப்டம்பர் 2023 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 43: Thiruvalluvar Year - 2054 - Purattasi 04 - Thursday 21 September 2023 - Trichy ★★ 10 Pages ₹5.00

## வடகிழக்குப் பருவமழை: மனித உயிரிழப்புகள் - பொதுச் சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்படுவதைத் தடுக்க

# அரசின் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (19.9.2023) தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, செப். 21 -

**“வடகிழக்குப் பருவமழையின் போது மனித உயிரிழப்புகள் ஏற்படுவதையும் பொதுச் சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்படுவதையும் தடுக்க அரசின் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றும்போது வலியுறுத்தினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (19.9.2023) தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

வடகிழக்குப் பருவமழை காலத்தில் நாம் மேற்கொள்ளவேண்டிய பல்வேறு ஆயத்தப் பணிகள் குறித்து நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களும், வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களும் எடுத்துரைத்துள்ளார்கள். தொடர்ந்து துறையினுடைய அதிகாரிகளும் அது குறித்து விளக்கம் தந்திருக்கிறார்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து நாம் மேற்கொண்ட சிறப்பான நடவடிக்கைகளின் காரணமாக பொதுமக்கள் பெரிய பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். அதே போல், சிறப்பாகத் திட்டமிட்டு, இந்த ஆண்டும் நாம் எதிர்வரும் பருவமழைக் காலத்தை அதேபோன்ற முறையை கையாளவேண்டும்.

**மாவட்ட ஆட்சியர்கள், கன மழை, புயல், வெள்ளம் ஆகியவற்றின் காரணமாக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை பல்துறை மண்டல குழுக்கள் அமைத்து தொடர்ந்து கண்காணித்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.**

இந்தப் பேரிடர்களை எதிர்கொள்ளப் பல்வேறு அணுகுமுறைகளைப் பல்வேறு துறைகளின் மூலமாக மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், தகவல் பரிமாற்றத்தைக் கூர்மைப்படுத்துதல், பணியாளர்களுக்கான பேரிடர் நிர்வாகப் பயிற்சி வழங்குதல், பொதுமக்களைத் தயார்படுத்துதல், துல்லியமான வானிலை அறிக்கைகளைப் பெற நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதுதான் பேரிடர் மேலாண்மை.

### திறன்மிக்க சமூகத்தை உருவாக்க உறுதி!

அந்தவகையில், தமிழ்நாடு அரசு ஒரு முழுமையான அணுகுமுறையின் மூலம் பேரிடர்கள், அபாயம் மற்றும் பாதிப்புகள் குறித்த தரவுகள் மற்றும் வரைபடங்களைத் தயாரிப்பதோடு, பேரிடர் அபாயத்தைக் குறைத்திடத் தணிப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. பொதுமக்களின், அபாயத்தை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்த தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. நமது அரசானது, அனைத்து விதமான பேரிடர்களையும் திறம்பட எதிர்கொண்டு, அதன் மூலம் பேரிடர்களை எதிர்கொள்ளக்கூடிய திறன்மிக்க சமூகத்தை உருவாக்க உறுதி பூண்டுள்ளது.

இதன்படி, பேரிடர் மேலாண்மையின் அனைத்து அம்சங்களான நிறுவன மற்றும் நிதி ஏற்பாடுகள், பேரிடர் தவிர்ப்பு, தணிப்பு, ஆயத்தம், மீட்பு, நிவாரணம், சீரமைப்பு, மறுவாழ்வு,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## ஒன்றிய பா.ஜ.க. அரசு சமூக நீதியை அமல்படுத்துவதில்லை!

# இட ஒதுக்கீடு வழங்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு இருக்க வேண்டும்!

## அகில இந்திய சமூக நீதிக் கூட்டமைப்பு நடத்திய 2-வது தேசிய மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !

சென்னை, செப். 21-

**அகில இந்திய சமூக நீதிக் கூட்டமைப்பு நடத்திய 2-வது தேசிய மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக உரையாற்றினார். அவரது உரையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு சமூக நீதியை அமல்படுத்துவதில்லை எனவும், இட ஒதுக்கீடு வழங்கும் அதிகாரம் மாநிலங்களுக்குத்தான் இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.**

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (19.09.2023) அகில இந்திய சமூகநீதிக் கூட்டமைப்பின் இரண்டாவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு, காணொலிக் காட்சி வாயிலாகத் தலைமையுரை ஆற்றினார்.

முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

அகில இந்திய சமூகநீதிக் கூட்டமைப்பின் இரண்டாவது மாநாட்டில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த ஏப்ரல் 3ஆம் நாள் நடைபெற்ற முதல் மாநாட்டைத் தொடர்ந்து, இப்போது இரண்டாவது மாநாட்டிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பை பெற்றுள்ளேன். சமூகநீதி பேசும் இடத்தில் நிச்சயமாக நான் இருப்பேன் என்ற அடிப்படையில் நான் பங்கெடுத்து உரையாற்றுகிறேன்.

* சமூக நீதி Social Justice
* மதச்சார்பற்ற அரசியல் Secular Politics
* சமதர்மம் Socialism
* சமத்துவம் Equality
* மாநில சுயாட்சி State Autonomy
* கூட்டாட்சிக் கருத்தியல் - Federalism

இவை உயிர் வாழும் இந்தியாவே, இணையற்ற இந்தியா என்பதால், இத்தகைய கருத்தியல்களை முன்னெடுக்க திராவிட முன்னேற்றக் கழகம் அகில இந்திய அளவில் சில கூட்டமைப்புகளை உருவாக்கி வருகிறது. அதில் மிகமிக முக்கியமானது இந்த சமூக நீதிக் கூட்டமைப்பு!

### மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி.க்கு எனது பாராட்டுகள்!

கழகத்தின் சார்பில் இதனை ஒருங்கிணைக்க தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டவர், மாநிலங்களவை உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான வில்சன் அவர்கள். தன்னிடம் தரப்பட்ட மற்றுமொரு வேலையாகக் கருதாமல், தன்னுடைய வாழ்க்கைக் கடமையாக நினைத்து இந்தக் கூட்டமைப்பை உருவாக்கி - தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். அவருக்கு என்னுடைய பாராட்டுகளையும் - அழைப்பினை ஏற்று வருகை தந்துள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கு எனது நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.9.2023) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பு நடத்தும் மாபெரும் இரண்டாவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றினார். இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான பி. வில்சன், ஜார்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், கர்நாடக மாநில முன்னாள் முதலமைச்சர் வீரப்ப மொய்லி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, சமாஜ்வாதி கட்சித் தலைவரும், உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ், ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான பரூக் அப்துல்லா, மகாராஷ்டிரா மாநில உணவுத்துறை அமைச்சர் சாகன் புஜ்பால், சமாஜ்வாதி கட்சி பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ராம் கோபால் யாதவ், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஞ்சய் சிங், டாக்டர் கே. கேசவ ராவ், திருமதி பிரியங்கா சதுர்வேதி, ஜான் பிரிட்டஸ், மனோஜ் குமார், மஸ்தான் ராவ், ஜவஹர் சிர்கர், திருமதி வந்தனா ஹேமந்த் சாவன், ஆ.ராசா, திருச்சி சிவா உள்ளிட்ட கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அரசியல் கட்சி மற்றும் அமைப்புக்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் சமூகநீதியைத்தான் இயக்கத்தின் இலக்கணமாக வைத்துள்ளது. இந்த இயக்கம் உருவாகக் காரணமே சமூகநீதிதான். சமூகநீதி - சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்காகவே திராவிட இயக்கம் தோன்றியது. 1916ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனப்படும் நீதிக்கட்சியானது சமூகநீதியை உருவாக்கவே தொடங்கப்பட்டது.

### இந்தியாவில் சமூக நீதிக்கு வழிகாட்டியது திராவிட இயக்கம்!

சென்னை மாகாணத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய நீதிக்கட்சியின் ஆட்சியில், 1922ஆம் ஆண்டு, அன்றைய முதலமைச்சர் பனகல் அரசர் அவர்கள் வகுப்புவாரிப் பிரதி நிதித்துவ உரிமை ஆணையைப் பிறப்பித்தார். அதுதான் இன்றுவரை தமிழ்நாட்டில் தொடர்கிறது. தமிழ்நாட்டைப் பார்த்து பல்வேறு மாநிலங்கள் சமூகநீதியை வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டு மக்களுக்கு சமூகநீதி வழங்கியது மட்டுமல்ல, இந்தியாவின் மற்ற மாநில ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அத்தகைய உரிமை கிடைக்க வழிகாட்டியதும் திராவிட இயக்கம்தான்!

தமிழ்நாட்டில் நடந்த போராட்டங்களின் காரணமாகத்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டமே முதன்முறையாகத் திருத்தப்பட்டது. “சமுதாயத்திலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்டவராக இருக்கும் எந்தச் சமூகத்தவர்க்கும் செய்யும் சலுகைகளை, அரசியல் சட்டத்தின் எந்தப் பிரிவும் தடுக்காது” என்பதுதான் அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 15(4) என்ற முதலாவது திருத்தம்! இந்த திருத்தத்துக்குக் காரணம், “happenings in Madras” என்று நாடாளு மன்றத்திலேயே சொன்னார் அன்றைய பிரதமர் நேரு.

‘Socially and Educationally’ என்பதுதான் அரசியலமைப்புச் சட்டத்தின் சமூகநீதி வரையறை! பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்க அதிகாரமளிக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 340ஆவது பிரிவில் ‘Socially and Educationally’ என்பதுதான் வரையறையாக உள்ளது. அதே சொல்தான் அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தத்திலும் சொல்லப்பட்டது. அதாவது சமூகநீதி எனப்படும் இடஒதுக்கீடு என்பதே சமூகரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின் தங்கியவர்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்ட வரையறை!

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 21-09-2023

# நாடு விட்டு வந்தவர்க்கு வீடு

**போ**ர்ச் சூழல் காரணமாக இலங்கை நாட்டை விட்டு வந்த ஈழத் தமிழர்க்கு வீடுகள் வழங்கி அவர்களுக்கு பேருதவி செய்திருக்கிறார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு வாழ் மக்களுக்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டுக்கு வாழ வந்த இலங்கைத் தமிழர்க்கும் ஏராளமான திட்டங்களை தீட்டித் தரத் தொடங்கினார் முதலமைச்சர் அவர்கள். கடந்த 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏராளமான திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இலங்கையில் இருந்து வந்த தமிழர்களை மனதில் வைத்து அறிவிக்கப்பட்டவை அவை. ரூ.318 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள் முகாம்களில் தங்கி இருக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கு நிறைவேற்றப்பட இருக்கிறது என்று அதில் குறிப்பிட்டார்.**

13 உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக் குழுவை அமைத்தார்கள். 2021 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் நாள் வேலூர் முகாமுக்கு முதலமைச்சரே நேரில் சென்று பார்வையிட்டார்கள்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பணக்கொடை, துணிமணிகள், பாத்திரங்கள், கல்வி உதவித் தொகை ஆகிய நலத்திட்டங்களை உயர்த்தப்பட்ட விகிதத்தில் வழங்கப்படும் என அறிவித்ததுடன், இலவச சமையல் எரிவாயு இணைப்பு, அடுப்பு மற்றும் சமையல் எரிவாயு மானியம், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும் எனவும் அறிவித்தார். இத்திட்டங்கள் அனைத்தும் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் மிக முக்கியமானது அவர்களுக்காக ரூ.231 கோடி செலவில் புதிதாக வீடுகள் கட்டித்தரப்பட உள்ளன என்பதுதான். **"அவர்கள் அகதிகள் அல்ல, அநாதைகள் அல்ல, அவர்களுக்கு நாம் இருக்கிறோம். அகதிகள் முகாம் என்று இனி அவற்றை அழைக்க மாட்டோம். இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்றே அழைப்போம்"** என்றும் அப்போது குறிப்பிட்டார் முதலமைச்சர் அவர்கள்.

1983 முதல் ஈழத்தில் இருந்து தமிழ் மக்கள் இங்கு வருவது தொடங்கியது. இவர்களுக்காக முகாம்கள் அமைக்கப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் இம்முகாம்கள் மிகமிக மோசமாக இருந்தன. அதனை பராமரிக்கவும் இல்லை. இந்த முகாம்களின் நிலைமை மிக மோசமாக இருக்கிறது என்பதை உணர்ந்த அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் 1997 ஆம் ஆண்டு ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொடுத்தார்கள். அதன்பிறகு 2011 முதல் 2021 வரை மீண்டும் அ.தி.மு.க. ஆட்சியில் அவர்கள் நிலைமை மிக மோசம் அடைந்தது. இந்த நிலையில் மீண்டும் இலங்கைத் தமிழர் நல்வாழ்வுத் திட்டங்களை மீண்டும் தொடங்கினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

இதன்படி இலங்கைத் தமிழர்கள் வசிக்கும் முகாம்களில் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

**கடந்த 17 ஆம் தேதி மிகமிக முக்கியமான நாள். தந்தை பெரியார் பிறந்தநாள். திராவிட முன்னேற்றக் கழகம் உதயமான நாள். அன்றைய தினம் 13 மாவட்டங்களில் உள்ள 19 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 79 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1591 வீடுகளை திறந்து வைத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

இலங்கைத் தமிழர்களது முகாம்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7,469 வீடுகள் புதிதாக கட்டித்தரப்படும் என முதலமைச்சர் அறிவித்திருந்தார். அவற்றில் முதற்கட்டமாக, 3510 வீடுகள் புதிதாக கட்டித்தரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டு, அதற்காக ரூ.176.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் இப்போது 1591 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை இலங்கைத் தமிழ் மக்களுக்கு வழங்கினார் முதலமைச்சர். அந்த வீடுகளுக்கு தங்களது பிள்ளைகளோடு மிகமிக கம்பீரமாக அவர்கள் நுழைந்தார்கள். இதற்கு முன்பு இருந்தவை முகாம் வீடுகளைப் போல இருக்கும். இப்போது வழங்கப்பட்டவை குடியிருப்புகள். மிக அழகான குடியிருப்புகள். அத்துடன் வீட்டுப் பயன்பாட்டு பொருள்களையும் மரக்கன்றுகளையும் வழங்கினார் முதலமைச்சர்.

**மேல்மொணவூர் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் கட்டப்பட்ட வீடுகளுக்கு நேரடியாகச் சென்று முதலமைச்சர் பார்வையிட்டார்கள். "வீடுகளை நாங்கள் கட்டித் தந்துவிட்டோம், நீங்கள் தான் பராமரித்துக் கொள்ள வேண்டும்" என்று அன்போடு முதலமைச்சர் கேட்டுக் கொள்ள, அம்மக்கள் அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள். இந்த முகாம்களில் அடிப்படை வசதிகள் அனைத்தும் சீர் செய்து தரப்பட்டுள்ளது.**

**நாடு விட்டு வந்த மக்களுக்கு வீடுகளை வழங்கி இருக்கிறார் முதலமைச்சர். இதுதான் எல்லாரது ஏக்கங்களையும் போக்கும் அரசாகும்.**



முதல்வர் – கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பில் காவிரி நீர் பெறுவது குறித்து ஒன்றிய அரசின் நீர்வளத் துறை அமைச்சரைச் சந்திக்க நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்திற்கு வருகை தந்த கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுடன் தமிழ்நாடு அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு ஆகியோர் உள்ளனர்.

### விளிம்புநிலை மக்களின் விடுதலையை பாடிய

# கவிஞர் தமிழ்ஒளிக்கு தஞ்சையில் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 21 -

கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு அன்னாருக்கு தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மார்பளவு சிலை அமைக்கப்படும் மற்றும் பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில், மாணவர்களுக்கு தமிழ் சார்ந்த போட்டிகள் நடத்தி கவிஞர் தமிழ்ஒளி பெயரில் பரிசுகள் வழங்க 50 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகையாக வைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.



கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக் குழுவினர் கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் பிறந்த நூற்றாண்டினை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் பல்வேறு கோரிக்கைகள் விடுத்தனர்.

கவிஞர் தமிழ்ஒளி செப்டம்பர் 29, 1924ஆம் ஆண்டு குறிஞ்சிப்பாடியை அடுத்த ஆடூர் என்னும் கிராமத்தில் பிறந்தார். விசயரங்கம் என்பது தமிழ்ஒளியின் இயற்பெயர் ஆகும்.

பாரதியாரின் வழித்தோன்றலாகவும், பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கி கவிதைகளைப் படைத்தவர். கவிதைகள் மட்டுமல்லாது கதைகள், கட்டுரைகள், இலக்கியத் திறனாய்வுகள், மேடை நாடகங்கள், குழந்தைப் பாடல்கள் எனப் பல இயற்றியவர். தாழ்த்தப்பட்ட மக்களின் இழிநிலை கண்டு, அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் சமூகத்தில் நிலவும் சாதிய வேறுபாடுகளையும் சாடி கவிதைகள் எழுதியவர்.

தமிழ்ஒளியின் கவிதைகள் தனித் தன்மை வாய்ந்தவை. தொடக்கக் காலத்தில் திராவிடர் கழகத்தைச் சார்ந்தவராக இருந்தபோதிலும் பொதுவுடைமைக் கொள்கைகளை உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார். உலகத் தொழிலாளர்களின் உரிமை நாளான மே தினத்தை வரவேற்றுப் பாடினார். தமிழ்ஒளியின் சிறுகதைகளில் வரும் பாத்திரங்கள் பெரும்பாலோர், ஒடுக்கப்பட்டவர்கள், தொழிலாளர்கள், போராளிகள் என அடித்தட்டு மக்களாகவே இருந்தார்கள்.

இடதுசாரி சிந்தனையுள்ள தமது படைப்பாக்கங்களில் கவிஞர் தமிழ்ஒளி சாதியத்தையும், விளிம்புநிலை மக்களின் விடுதலையையும் பாடினார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் உறுப்பினராக இருந்தார்.

இந்நிலையில் கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு கவிஞர் தமிழ்ஒளி அவர்களுக்கு தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் மார்பளவு சிலை அமைக்கப்படும். மேலும் பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் 50 இலட்சம் ரூபாய் வங்கியில் வைப்புத் தொகையாக செலுத்தி, கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் தமிழ் சார்ந்த போட்டிகள் நடத்தி கவிஞர் தமிழ்ஒளி பெயரில் பரிசுகள் வழங்கப்படும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேசம் முதலிடம்!

# கிறிஸ்தவர்களுக்கு எதிராக 8 மாதங்களில் 500 தாக்குதல்கள்!

## யுனைடெட் கிறிஸ்டியன் அமைப்பு தகவல்!

*புதுடெல்லி, செப். 21 -*

*கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல் தொடர்பாக டெல்லியில் உள்ள சிவில் சமூக அமைப்பான யுனைடெட் கிறிஸ்டியன் போரம் புதிய தரவு ஒன்றை வெளியிட்டுள்ளது.*

*தரவில், "2023ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் மிகமோசமான அளவில் அதிகரித்துள்ளதாகவும், முதல் 8 மாதங்களில் 23 மாநிலங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக 525 வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறியுள்ளன" எனக் கூறியுள்ளது.*

*மேலும் இந்த எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டு முழுவதும் நடந்த மொத்த சம்பவங்களின் எண்ணிக்கையை வெறும் 8 மாதங்களிலேயே நெருங்கியுள்ளது" எனக் கூறப்பட்டுள்ளது.*

**உத்தரப்பிரதேசம் டாப்**

*கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்களில் பா.ஜ.க. ஆளும் உத்தரப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. உத்தரப்பிரதேசத்தில் கடந்த 8 மாதங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக 211 சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. சத்தீஸ்கரில் 118 சம்பவங்களும், ஹரியானாவில் 39 சம்பவங்களும் அரங்கேறியுள்ளது. சத்தீஸ் கரில் அரங்கேறிய சம்பவங்கள் அனைத்தும் இந்துத்துவா அமைப்புகளால் நிகழ்த்தப்பட்டவை ஆகும். சத்தீஸ்கர் மட்டுமல்ல, நாடு முழுவதும் 23 மாநிலங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக அரங்கேறிய 95% சம்பவங்கள் இந்துத்துவா கும்பல்களால் அரங்கேற்றப்பட்டுள்ளன.*

**மணிப்பூரிலும்!**

*பா.ஜ.க.வின் இழி அரசியலால் கடந்த 5 மாதங்களாக பற்றி எரிந்து வரும் மணிப்பூர் மாநிலத்தில் 386 வழிபாட்டுத்தலங்கள் கொளுத்தப்பட்டுள்ளன. இதில் 254 கிறிஸ்தவ தேவாலயங்கள் ஆகும். மேலும் கிறிஸ்தவ மக்களை குறி வைத்து தாக்குதல் சம்பவங்கள் அங்கு மிக மோசமாக அதிகரித்து வருகின்றன.*

### சிறுபான்மை மக்களை வேட்டையாட

# என்.ஐ.ஏ.வை பயன்படுத்துகிறது மோடி அரசு!

## ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. குற்றச்சாட்டு!

*கும்பகோணம், செப். 21 -*

*சிறுபான்மை மக்களை வேட்டையாட என்.ஐ.ஏ.வை ஒன்றிய பா.ஜ.க. அரசு பயன்படுத்துகிறது என்று ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. குற்றம்சாட்டியுள்ளார்.*

*மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. வெளியிட்டுள் அறிக்கை வருமாறு:-*

*அரபு மொழியை கொச்சைப்படுத்தும் வகையிலும், அதை கற்பவர்களும், கற்பிப்பவர்களும் தீவிரவாதிகள் என்ற கோணத்திலும் விசாரணை நடத்துவதும், அரபு மொழி புத்தகங்கள் கைப்பற்றப்பட்டன என்று பொத்தாம் பொதுவாக ஒரு மொழியை தீவிரவாதத்தோடு தொடர்பு படுத்துவதும் கண்டிக்கத்தக்கது. நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியுள்ளதால் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சியிலும் என்.ஐ.ஏ. ஈடுபட்டு வருவதாகவே தெரிகிறது. என்.ஐ.ஏ. என்பது பா.ஜ.க. அரசின் கைக்கூலியாக முஸ்லிம்களை அச்சுறுத்தும் புலனாய்வு அமைப்பாக விளங்குகிறது.*

*அமலாக்கத்துறையை வைத்து எதிர்க்கட்சி தலைவர்கள் எவ்வாறு வேட்டையாடப்படுகிறார்களோ, அதே பாணியில் சிறுபான்மை மக்களை வேட்டையாட என்.ஐ.ஏ. பயன்படுத்தப்படுகிறது. தொடர்ந்து முஸ்லிம் சமூகத்திடம் அத்துமீறும் போக்கை என்.ஐ.ஏ. கைவிட வேண்டும். பா.ஜ.க. தூண்டுதலின் பேரில் சோதனை என்ற பெயரில் என்.ஐ.ஏ அமைப்பு தமிழ்நாட்டில் முஸ்லிம்களை தனிமைப்படுத்தும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது ஏற்புடையது அல்ல. தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து வழக்குகளையும் தமிழ்நாடு காவல்துறையே விசாரிக்க வேண்டும்.*

*இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி....; அ.தி.மு.க.வுக்கும், பா.ஜ.க.வுக்கும் இடையே இருந்து வருவதாகக் கருதப்பட்ட கூட்டணி முறிந்துவிட்டதாமே?

**பட்டணம் : ஆமாம் அய்யா; இரண்டு தரப்பினரும் மாறி மாறி, 'நோட்டா - கோட்டா' என்றெல்லாம் பேசி வருவதைப் பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது.**

**ஜெயக்குமாரும், அண்ணாமலையும், போட்டி போட்டுக் கொண்டு, பேட்டி கொடுத்து வருவதைப் பார்க்கும் பொது மக்களும் அவர்களுடைய கூட்டணி முறிவு உறுதியாகி விட்டதாகத்தான் நினைக்கிறார்கள்.**

**'சபாஷ், சரியான பேட்டி !'**

# சமூக நீதியைக் கண்காணிக்க அகில இந்திய அளவில் குழு அமைக்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இதனைத் தொடர்ந்து அகில இந்தியாவுக்குமான சமூகநீதிக் குரலை எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் எதிரொலித்தார்கள். 14.10.1973 அன்று அலகாபாத்தில் உத்தரப் பிரதேச மாநில பட்டியலின பிற்படுத்தப்பட்டோர் மாநாடு நடந்தது. அதில் முதலமைச்சர் கலைஞர் பங்கெடுத்து உரையாற்றினார்.

தனது உரையின் முடிவில் இப்படிக் குறிப்பிட்டார் கலைஞர் அவர்கள்... "பட்டியலின - பின்தங்கிக் கிடக்கின்ற சமுதாயத்திற்காக ஒன்றிய அரசினர் இரண்டு முன்னெடுப்புகளை நினைவில்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தி.மு.க.!

ஒன்றிய அரசு வேலைவாய்ப்புகளில் பட்டியலின மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஒழுங்காக முழுமையாக நிரப்பப்பட வேண்டும். அதுபோல ஒன்றிய அரசாங்கத்தினுடைய வேலைவாய்ப்புகளில் - இனிமேல் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, இவ்வளவு இடம் என்று ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அதையும் ஒன்றிய அரசு உடனடியாகச் செய்ய வேண்டும்" என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ஆற்றினார்கள்.

**மண்டல் பரிந்துரைகளை அமல்படுத்த அழுத்தம் கொடுத்தவர் கலைஞர்!**

இதை வைத்துதான் 1978ஆம் ஆண்டு பி.பி.மண்டல் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நிலை குறித்து ஆராய ஆணையம் அமைக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு பி.பி. மண்டல் அவர்கள் அறிக்கை கொடுத்தாலும் அது அமல்படுத்தப்படவில்லை. பிரதமர் வி.பி.சிங் அவர்கள் 1990ஆம் ஆண்டு மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளை அமல்படுத்த அழுத்தம் கொடுத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். தமிழ்நாடு சட்டப் பேரவையில் இதற்காக தீர்மானமே நிறைவேற்றி வலியுறுத்தினார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு, ஒன்றிய அரசு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் 27 விழுக்காடு இடஒதுக்கீடு கிடைத்தது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சமூகநீதி அளித்த அந்தக் காரணத்திற்காகவே, அன்றைய தினம் வி.பி.சிங் அவர்களின் ஆட்சியை பா.ஜ.க. கவிழ்த்தது என்பதையும் உங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இப்படி தொடர்ச்சியாக சமூகநீதியை நிலைநாட்ட நாம் போராடி வந்தாலும் - சமூகநீதிக்கான தடைகளும் விழவே செய்கின்றன. இதில் பா.ஜ.க. பெரிய அளவிலான தடுப்புச் செயல்களைச் செய்து வருகிறது.

**தேர்தல் வருவதால் - விளிம்பு நிலை மக்களை ஏமாற்ற ஆர்.எஸ்.எஸ். நாடகம்!**

சமூகநீதியை முறையாக பா.ஜ.க. அமல்படுத்துவது இல்லை. கடந்த 9 ஆண்டுகாலத்தில் ஒன்றிய அரசின் துறைகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு ஒதுக்கீடு முழுமையாக வழங்கப்படவில்லை. ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட - பட்டியலின - பழங்குடியின மக்கள் முன்னேறுவதை பா.ஜ.க. விரும்பவில்லை. எனவேதான் அவர்கள் சமூகநீதிக்கு எதிராக இருக்கிறார்கள். திடீரென்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் அவர்கள், இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளார். இந்த நேரத்தில் நாம் கேட்க வேண்டியது, பிற்படுத்தப்பட்டோருக்கு சமூகநீதி வழங்கிய வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்த போது, இதே ஆர்.எஸ்.எஸ் எங்கே போயிருந்தது? அன்றைக்கு ஆட்சியைக் கவிழ்த்த பா.ஜ.க.வை பின்னால் இருந்து இயக்கியது இதே ஆர்.எஸ்.எஸ்.தானே? எனவே, நாடாளுமன்றத் தேர்தல் வரப்போவதால் விளிம்பு நிலை மக்களை ஏமாற்றுவதற்கு இப்போது மோகன் பகவத் இப்படி சொல்கிறாரே தவிர, உள்ளார்ந்த ஈடுபாடு காரணமாக அவர் சொல்லவில்லை.

பா.ஜ.க.வுக்கு உண்மையிலேயே சமூக நீதியில் அக்கறை இருக்குமானால், 9 ஆண்டுகால ஆட்சியில், ஒன்றிய அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை முழுமையாகச் செயல்படுத்தியிருக்க வேண்டும். ஏன், ஒன்றிய அரசு அலுவலகங்களில் காலிப்பணியிடங்கள் அனைத்தையும் சமூகநீதி அடிப்படையில் அவர்கள் நிரப்ப வேண்டும். அதனைச் செய்வார்களா? சமூகநீதி என்பது ஒரு மாநிலத்தின் பிரச்சினை அல்ல. அனைத்து மாநிலங்களின் பிரச்சினை. குறிப்பாக பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும்போது இது அகில இந்தியாவிற்கும் பொதுவான பிரச்சினை.

**புறக்கணிப்பு, தீண்டாமையை முறியடிக்கும் மருந்து சமூகநீதி!**

ஒவ்வொரு மாநிலத்துக்கும் சாதி வகுப்பு அளவீடுகள் வேறுபடலாம். எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் 69 விழுக்காடு இடஒதுக்கீடு செயல்பாட்டில் இருக்கிறது. அதேபோல் ஒவ்வொரு மாநிலத்திலும் இடஒதுக்கீடு வெவ்வேறு விழுக்காடாக இருந்தாலும், பிரச்சினை ஒன்றுதான். அதுதான் புறக்கணிப்பு. எங்கெல்லாம் புறக்கணிப்பு - ஒதுக்குதல் - தீண்டாமை - அடிமைத்தனம் - அநீதி இருக்கிறதோ அங்கெல்லாம் அதனை முறிக்கும் மருந்தாக இருப்பதுதான் சமூகநீதி.

பட்டியலின பழங்குடியின மக்களின் இடஒதுக்கீடு முறையாக வழங்கப்பட வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முறையாக வழங்கப்பட வேண்டும். இவற்றை அகில இந்திய

## சமூக நீதி வழங்கிய வி.பி.சிங் அரசை பா.ஜ.க. கவிழ்த்தபோது ஆர்.எஸ்.எஸ். எங்கே போனது?

ரீதியில் கண்காணிக்க வேண்டும். சமூகரீதியாகவும் கண்காணிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆணையத்தை அமைத்தது. சமூகநீதி ஆணையத்தை அமைத்தது. சமூகநீதி கண்காணிப்புக் குழுவை அமைத்தது. இந்தக் கண்காணிப்புக் குழு, கல்வி, வேலை வாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல், முறையாக முழுமையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும். வழிகாட்டும். செயல்படுத்தும். இவை சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்குப் பரிந்துரை செய்யும். இதுபோல அனைத்து மாநிலங்களிலும் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அகில இந்திய அளவில் இந்தக் குழு நிச்சயம் அமைக்கப்பட வேண்டும்.

இந்தக் கூட்டத்தின் வாயிலாக நிறைவேற்றப்பட இருக்கும் தீர்மானங்களை நாம் அனைவரும் இணைந்து முன்னெடுக்க வேண்டும்.

**நீதிபதிகள் நியமனங்களில் இட ஒதுக்கீடு கட்டாயம் தேவை!**

*** உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்ற நீதிபதிகள் பதவிக்கான நியமனங்களில் அட்டவணை சாதிகள், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், ஓ.பி.சி.க்கள், பெண்கள் மற்றும் சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீட்டை கட்டாயமாக்குவதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தங்களை ஒன்றிய அரசு கொண்டுவர வேண்டும்.**

*** பதவி உயர்வு மற்றும் பணிமூப்பு நிர்ணயம் ஆகியவற்றில் OBCகளுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.**

*** 2015இல் சேகரிக்கப்பட்ட சமூகப் பொருளாதார சாதி கணக்கெடுப்புத் தரவை ஒன்றிய அரசு உடனடியாக வெளியிட வேண்டும்.**

***SC/ST/OBCகளுக்கான விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் மற்றும் இடஒதுக்கீடுகளை ஆராய வேண்டும்.**

*** அரசின் கல்வி, வேலை வாய்ப்புகளில் தரப்படும் இடஒதுக்கீட்டை தனியார் வேலை வாய்ப்பிலும் பின்பற்ற வேண்டும்.**

*** மத்திய பல்கலைக்கழகங்கள், I.I.Tகள் , I.I.Mகளில் OBC, SC & ST சமூகங்களைச் சேர்ந்த பேராசிரியர்களை விகிதாச்சார முறையில் நியமனம் செய்ய வேண்டும்.**

*** I.I.T, I.I.M மற்றும் I.I.S.C போன்ற முதன்மையான கல்வி நிறுவனங்களுக்கான சேர்க்கைகளில் ஓ.பி.சி, எஸ்.சி மற்றும் எஸ்.டி மாணவர்களுக்கு விகிதாசாரப்படி உரிய முன்னுரிமை அளிக்க வேண்டும்.**

*** SC/ST/OBC ஊழியர்கள் மற்றும் பணியாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு ஒரு சமூகநீதிக் குழு இருக்க வேண்டும்.**

***50 விழுக்காடு என்றுள்ள இடஒதுக்கீடு உச்சவரம்பு நீக்கப்பட வேண்டும்.**

***தமிழ்நாட்டில் உள்ளது போல், ஒன்றிய அளவில், ஒன்றிய அரசின் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு முழுமையாகச் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்திட, அகில இந்திய அளவில் சமூகநீதிக் கண்காணிப்புக் குழுவினை நியமிக்க வேண்டும்.**

**1980ஆம் ஆண்டு பி.பி.மண்டல் அவர்கள் அறிக்கை கொடுத்தாலும் அது அமல்படுத்தப்படவில்லை. பிரதமர் வி.பி.சிங் அவர்கள் 1990ஆம் ஆண்டு மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளை அமல்படுத்த அழுத்தம் கொடுத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். தமிழ்நாடு சட்டப்பேரவையில் இதற்காக தீர்மானமே நிறைவேற்றி வலியுறுத்தினார்.**

இவை உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் செயல்படுத்திக் காட்ட வேண்டும். அதிலும் குறிப்பாக, மிக முக்கியமாக இடஒதுக்கீடு வழங்கும் அதிகாரம் மாநிலங்களிடம் இருக்க வேண்டும்.

**'இட ஒதுக்கீடு' மாநிலங்களின் உரிமை!**

தமிழ்நாடு மாநிலத்தில் 69 விழுக்காடு இடஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டது. சில மாநிலங்களில் 50 விழுக்காடு உள்ளது. அந்தந்த மாநிலங்களின் மக்கள் விகிதாச்சாரம் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். எனவே, 50 விழுக்காட்டுக்கு மேல் இடஒதுக்கீடு அளவீடு போகக் கூடாது என்று சொல்வதும் சரியல்ல. "இடஒதுக்கீடு" மாநிலங்களின் உரிமை என்று அதிகாரத்தை மாற்றி வழங்கினால்தான், அந்தந்த மாநிலங்கள் தங்கள் மாநில மக்களுக்கு உரிய இடஒதுக்கீட்டினை வழங்க முடியும்.

**மக்கள் சமூகநீதிப் பெருவாழ்வு வாழப் பாடுபடுவோம்!**

இந்தியாவில் உண்மையான கூட்டாட்சிக் கருத்தியல் மலர்ந்தாக வேண்டும். நாம் மேற்கண்ட "சமூகநீதி" தீர்மானங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க உழைப்போம். இந்திய நாட்டு மக்கள் அனைவரும் சமூகநீதிப் பெருவாழ்வு வாழப் பாடுபடுவோம். நன்றி! வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# நோய்த் தொற்றினை தடுக்கவேண்டும்! - தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்... முதல் பக்கத் தொடர்ச்சி

திறன் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கி தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை கொள்கையை நமது அரசு மேம்படுத்தி வெளியிட்டுள்ளது. நமது பேரிடர் மேலாண்மை இயக்கத்தில் முக்கியமான மூன்று கொள்கைகளைப் பின்பற்றி வருகிறோம்;

**பேரிடர் மேலாண்மை கொள்கைகளின் சுருக்கம்!**

1. **அனைத்து வகை பேரிடர்களின் எதிர்மறையான விளைவுகளை குறைத்தல்;**
2. **உயிரிழப்பு, பொதுச் சொத்துகள் மற்றும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்புகளின் சேதம் ஆகிவற்றைத் தவிர்த்தல்;**
3. **அரசு உருவாக்கிய பொருளாதார மற்றும் வளர்ச்சி ஆதாயங்களை இழக்காமல் இருத்தல்;**

இவைதான் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை கொள்கைகளின் சுருக்கம்.

அக்டோபர் மாதம் துவங்கி டிசம்பர் மாதம் வரை நீடிக்கும் வடகிழக்கு பருவமழைக் காலத்தில் தமிழ்நாட்டிற்கு, 443.0 மி.மீட்டர் மழை இயல்பாக கிடைக்கப் பெறுகிறது. இது தமிழ்நாட்டின் வருடாந்திர இயல்பான மழை அளவில், 48 விழுக்காடு.

நமது மாநிலம் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் கிடைக்கப் பெறும் மழைப்பொழிவை அதிகமாகச் சார்ந்துள்ளதால், பருவமழையின் பலன்களை அதிகமாக பெற, அதனால் ஏற்படும் இழப்பு மற்றும் சேதம் ஆகிய வற்றைக் குறைப்பது மிகவும் அவசியமாகிறது.

**வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகள்!**

ஏற்கெனவே கடந்த 14.9.2023 அன்று, தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அனைத்துத் துறை செயலாளர்கள், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள், இந்திய வானிலை ஆய்வு மையம் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் சேதத் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ கடந்த ஆண்டுகளில், வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் ஏற்பட்ட புயல், கன மழை மற்றும் வெள்ளப் பெருக்கின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை கண்டறிந்து, பேரிடர்களின் சேதத்தை குறைப்பதற்கும், பாதிப்புகளை தவிர்ப்பதற்கும், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நீர்வள ஆதாரத் துறை ஆகிய துறைகளுக்கு மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து 716 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு வெள்ளத் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாக 4399 ஆக இருந்த பேரிடர் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் 3770 ஆக குறைந்துள்ளன.

❖ வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் வலுப்படுத்தப்பட்டுள்ளது. மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு மையங்களை முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்கள் மூலம் பொது மக்கள் தொடர்பு கொள்ளலாம்.

❖ பேரிடர் குறித்த எச்சரிக்கை தகவல்கள் கடலோர பகுதிகளில் 424 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை கருவிகள், TNSMART செயலி, பொதுவான எச்சரிக்கை நடைமுறை, அச்சு, மின்னணு மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு உரிய காலத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்.

வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் ஏற்படும் புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிப்பிற்குள்ளாகும் பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க பல்நோக்கு பாதுகாப்பு மையங்களும், நிவாரண மையங்களும் கண்டறியப்பட்டு, தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**உபரிநீர் வெளியேற்றல்!**

❖ நிவாரண முகாம்களில் தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் உள்ளதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்திட வேண்டும்.

❖பாதிப்புக்குள்ளாகும் பகுதியில் உள்ள மக்களை வெளியேற்றும் போது முதியோர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். பேரிடர் காலங்களில், பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைக்கப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாருவதோடு, கரைகளையும் வலுப்படுத்த வேண்டும். அணைகளிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படும் போது பொதுமக்களுக்கு உரிய முன்னெச்சரிக்கை வழங்கப்பட வேண்டும்.

❖ மழை, வெள்ள காலங்களில் மின் கசிவினால் ஏற்படும் விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியம். பள்ளிகளில் மாணவர்களது பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும். பேரிடர் காலங்களில் செய்யக்கூடியவை மற்றும் செய்யக் கூடாதவை குறித்து மாணவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

❖ பருவமழைக் காலத்தில், நோய்த் தொற்று ஏற்படாமல் இருக்கவும், நோய்த் தொற்று பரவலைத் தடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்வதோடு, நோயுற்ற மக்களுக்கு சிகிச்சை வழங்கும் பொருட்டு, உயிர்காக்கும் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், பாம்பு கடிக்கான மாற்று மருந்துகள், ஆக்ஸிஜன் சிலிண்டர்களைப் போதுமான அளவு இருப்பு வைக்க வேண்டும்

❖ மாவட்ட ஆட்சியர்கள், கன மழை, புயல், வெள்ளம் ஆகியவற்றின் காரணமாக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை பல்துறை மண்டல குழுக்கள் அமைத்து தொடர்ந்து கண்காணித்து, முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

**தூர்வாரும் பணிகளை விரைந்து முடித்திடுக!**

❖சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும், மழைநீர் வடிகால் பணிகளையும், மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும்.

சென்னை, புறநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சாலைகள் நிலை மிகவும் மோசமாக உள்ளது என்று எனக்கு தொடர்ந்து புகார்கள் வந்து கொண்டே இருக்கின்றன. அதேபோல் பல்வேறு மாவட்டங்களிலும், சாலைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாவதோடு, சிறு விபத்துக்கள் ஏற்படும் செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இது ஏற்புடையதல்ல.

மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் வாரியப் பணிகள், மெட்ரோ இரயில் பணிகள், மின்வாரியப் பணிகள் என பல்வேறு பணிகள் காரணமாக மட்டுமல்லாமல், பொதுவாக பழைய சாலைகள் நிலை போதிய பராமரிப்பு இல்லாமல் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்படவேண்டும். நம் மாநில சாலைகள் தரமானதாக, மக்கள் பாராட்டப்படும் வகையில் அமைக்கப்படவேண்டும். இதனை வெறும் அறிவுரையாக மட்டும் நான் கூறவில்லை. அமைச்சர் பெருமக்களும், அரசு செயலாளர்களும், தலைவர்களும் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். நானும் இதனை கள ஆய்வு செய்தும், பணி முன்னேற்றம் கூட்டங்கள் நடத்தியும் உறுதி செய்ய திட்டமிட்டிருக்கிறேன். இந்த வாரத்தில் சென்னையில் ஆய்வு நடத்தவுள்ளேன்.

**மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் வாரியப் பணிகள், மெட்ரோ இரயில் பணிகள், மின்வாரியப் பணிகள் என பல்வேறு பணிகள் காரணமாக மட்டுமல்லாமல், பொதுவாக பழைய சாலைகள் நிலை போதிய பராமரிப்பு இல்லாமல் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்படவேண்டும். நம் மாநில சாலைகள் தரமானதாக, மக்கள் பாராட்டப்படும் வகையில் அமைக்கப்படவேண்டும். இதனை வெறும் அறிவுரையாக மட்டும் நான் கூறவில்லை. அமைச்சர் பெருமக்களும், அரசு செயலாளர்களும், தலைவர்களும் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். நானும் இதனை கள ஆய்வு செய்தும், பணி முன்னேற்றம் கூட்டங்கள் நடத்தியும் உறுதி செய்ய திட்டமிட்டிருக்கிறேன். இந்த வாரத்தில் சென்னையில் ஆய்வு நடத்தவுள்ளேன்.**

இனி சுற்றுப்பயணம் செய்ய அனைத்து மாவட்டங்களிலும், இது தொடர்பாக நேரடியாக நான் ஆய்வு செய்ய முடிவு செய்திருக்கிறேன். சாலைப்பணிகள் மேற்கொள்ளும் துறைகள் அனைத்தும் துரிதமாக, தரமாக பணிகளை மேற்கொண்டு முடிக்கவேண்டும் என்பதை கண்டிப்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும்!**

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளிலும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொள்வதோடு, உணவு தயாரிக்கும் சமையல் கூடங்களை தயார் நிலையில் வைத்திருக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

❖ ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு, புயல், கனமழை மற்றும் காற்றின் வேகம் தொடர்பான முன்னெச்சரிக்கை தகவல்களைத் தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் உடனுக்குடன் அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

❖பருவமழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக மாவட்டந்தோறும் அனைத்துத் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து ஒத்திகைப் பயிற்சிகள் நடத்துவதோடு, பேரிடர் காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கவும், குறைத்திடவும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையுடன் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக வடகிழக்குப் பருவமழையின் போது, பெய்த கன மழையின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை கருத்தில் கொண்டு, பேரிடர்களின் போது மனித உயிரிழப்புகள் ஏற்படுவதையும், பொதுச் சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்படுவதையும் தடுக்க அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழா
சேடபட்டியார் அவர்களின்
முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்விற்கு
வருகை தரும்
நாள் : 21.09.2023 இடம் : முத்தப்பன்பட்டி
இருளகற்றும்
உதயமே
எளியவர்
இதயமே
வருக! வருக!!
P.மூர்த்தி
மதுரை வடக்கு மாவட்ட கழக செயலாளர்
வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
கோ.தளபதி MLA
மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளர்
மு.மணிமாறன்
மதுரை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
மதுரை தெற்கு மாவட்ட திமுக
SM FLEX
99439 88999, 97903 64550



கழக முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழா
நாள்: 21.09.2023, வியாழக்கிழமை
இடம்: முத்தப்பன்பட்டி, மதுரை
கழக முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கவும்
முன்னாள் சபாநாயகர்
சேடபட்டி இரா.முத்தையா
அவர்களின் நினைவேந்தல்
நிகழ்வில் கலந்து
கொள்ள வருகைதரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர் நலன் (ம) விளையாட்டு
மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
P.மூர்த்தி
மாவட்ட கழகச் செயலாளர், மதுரை வடக்கு மாவட்டம்
வணிகவரி (ம) பத்திர பதிவுத்துறை அமைச்சர்
கோ.தளபதி
மதுரை மாநகர் மாவட்ட கழகச் செயலாளர்
மு.மணிமாறன்
மாவட்ட கழகச் செயலாளர், மதுரை தெற்கு மாவட்டம்
மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க



முதலமைச்சர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், தேக்காட்டூர் கிராமம், சிவபுரம் ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் அம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் திருமுருகேசன், ஒன்றியக்குழுத் தலைவர்கள் திருமதி.மேகலாமுத்து (அரிமளம்), திருமதி.வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), ஒன்றியக் குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகர், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மு.செய்யது முகம்மது, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மு.க.ராமகிருஷ்ணன், வட்டாட்சியர் விஸ்வநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் திருப்பூர் ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் தெற்கு மாநகரக் கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகரக் கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### வரும் நாட்களில் நாடு எரிமலையாகவும்

# குறிப்பிட்ட நாளில் சோவியத் யூனியனாகவும் மாறும்!

## மாநிலங்களவையில் வைகோ எச்சரிக்கை!



புதுடெல்லி, செப். 21 - “வரும் நாட்களில் நாடு எரிமலையாக மாறும்; குறிப்பிட்ட நாளில் சோவியத் யூனியனாகவும் மாறும்” என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் வைகோ அவர்கள் எச்சரிக்கை விடுத்தார்.

75 ஆண்டுகால பாராளுமன்ற தொடர் ஓட்டம் பற்றிய நினைவலைகள் குறித்து ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் நாடாளுமன்ற மாநிலங்களவை சிறப்புக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:

இந்திய அரசியல் நிர்ணய சபை தொடங்கி, 75 ஆண்டு கால நாடாளுமன்றத் தொடர் ஓட்டத்தில் அதன் சாதனைகள், அனுபவம், நினைவுகள் மற்றும் கற்றல் பற்றிய விவாதத்தில் பங்கேற்க எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவைத்தலைவர் அவர்களே! 1978 இல் ராஜ்யசபா உறுப்பினராக நாடாளுமன்றத்தில் நுழைந்த எனக்கு இது ஒரு நீண்ட பயணம்.

இப்போது ராஜ்யசபாவில் நான் 4வது முறையாக பதவியேற்று இருக்கிறேன். மேல்சபை உறுப்பினராக இருந்ததைத் தவிர, 12வது மக்களவையிலும், 13வது மக்களவையிலும் இரண்டு முறை மக்களவை உறுப்பினராக இருந்த பெருமை எனக்கு கிடைத்தது.

கடந்த 75 ஆண்டுகளில் நாடு ஏராளமான சூறாவளிகளையும், ஏற்ற இறக்கங்களையும் எதிர்கொண்டது.

ஆனால் எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சி என்னவென்றால், ஏன் ‘பாரத்’ என்று பெயர் மாற்றப்பட்டது என்பதுதான். அண்மையில் ‘ஜி 20 மாநாடு’ நடந்தது. அம்மாநாட்டில் நம்முடைய பிரதமருக்கு முன்பு பாரத் என்ற பெயர் பலகை வைத்திருந்தார்கள். ‘இந்தியா’ என்ற பெயர் இல்லை. எனவே நாம் இந்தியாவை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. எனவே நீங்கள் அதை ‘யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் இந்தியா’ என்று அழையுங்கள். அப்படி அழைக்கப்பட வேண்டும். அனைத்து மாநிலங்களுக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

பாரதம் எதிலிருந்து, எங்கிருந்து வந்தது? உபநிஷதங்களில் இருந்து, சனாதனம் மற்றும் இந்து ராஷ்டிரத்திலிருந்து வந்தது. எனவே இந்த நாட்டை இந்து ராஷ்டிராவாக மாற்ற முயற்சிக்கின்றனர். ஆனால் நான் அவர்களிடம் நினைவு படுத்த விரும்புகி றேன், நீங்கள் எங்கள் பகுதிக்குள் நுழைய முடிய வில்லை, சந்திர குப்த மௌரியர்கள் தமிழ்நாட்டிற்குள் கால் வைக்க முடியவில்லை. மொகலாயர்கள் நுழைய முடிய வில்லை. வடக்கிருந்து வந்தவர்களால் தமிழ்நாட்டிற்குள் நுழைய இயலவில்லை.

நாங்கள் கங்கைக் கரையில் போரில் வென்றோம். நாங்கள் இமயமலையில் வெற்றிக் கொடி நாட்டினோம்.

நான் இதை சுட்டிக் காட்ட மிகவும் வருந்துகிறேன், இந்தியப் பிரதமர் இந்தியாவிற்குப் பதிலாக பாரத் என்று வைக்கிறார், எனவே இனிமேல் நாம் இந்தியாவை பாரத் என்று அழைக்க வேண்டும். இந்தியாவை கண்டு பயப்படுவது ஏன்? இந்தியா கூட்டணி உருவானது. அது அவர்களை அச்சுறுத்துகிறது. இந்தியா அவர்களை அச்சுறுத்தியது. எனவே பாரத் என்று பெயர் மாற்ற முயற்சிக்கிறார்கள்.

நான் அதிக நேரம் எடுக்க விரும்பவில்லை, ஏனென்றால் நீங்கள் மூன்று நிமிட நேரம் மட்டும் தந்து இருக்கிறீர்கள்.

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அம்பேத்கர் உருவப்படம் வைக்க கோரிக்கை விடுத்தேன். இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த ராணுவ வீரர்களுக்கு வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகை நடத்த அனுமதி வேண்டி கோரிக்கை எழுப்பினேன்.

மதச்சார்பின்மை அச்சுறுத்தலில் உள்ளது. முஸ்லிம்கள் அச்சுறுத்தலில் உள்ளனர். அவர்களை அச்சுறுத்தும் சனாதன சக்திகள், ‘முஸ்லிம்களே, நீங்கள் இந்தியாவை விட்டு வெளியேறுங்கள்’ என்று கூறுவதால் அவர்கள் பயப்படுகிறார்கள். இது உங்கள் நாடு அல்ல. இது இந்துத்துவவாதிகளின் குரல். வரும் நாட்களில் நாடு எரிமலையாக மாறும், குறிப்பிட்ட நாளில், அது சோவியத் யூனியனாக மாறும் என்பது குறிப்பிடத்தக்கது. சோவியத் யூனியனில் என்ன நடக்கிறது? அது இந்தியாவில் நடக்கும். பல மாநிலங்களை இணைத்து உருவாக்கப்பட்டது. அதனால்தான் நான் ஐக்கிய இந்திய ஒன்றியம் என்று குறிப்பிடுகிறேன்.

இல்லையெனில் சுதந்திர தின நூற்றாண்டு விழாவை கொண்டாட இந்தியா இருக்காது. 2047 இல் இந்தியாவில் மாநிலங்கள் இருக்காது.

இவ்வாறு வைகோ அவர்கள் பேசினார்.

### கவிஞர் தமிழ்ஒளிக்கு சிலை! மாணவர்களுக்கு பரிசுகள் அறிவித்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக்குழு அறிவிப்பு!

சென்னை, செப்.21- முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக் குழு நன்றி தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கவிஞர் தமிழ்ஒளி அவர்களுக்கு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மார்பளவு சிலை மற்றும் பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் கவிஞர் தமிழ்ஒளி பெயரில் பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவித்த முதல் அமைச்சர் அவர்களுக்கு கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக் குழு சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கவிஞர் தமிழ்ஒளி அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு கவிஞர் தமிழ் ஒளி அவர்களுக்கு தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் மார்பளவு சிலை அமைக்கப்படும். மேலும் பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் 50 இலட்சம் ரூபாய் வங்கியில் வைப்புத் தொகையாக செலுத்தி, கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் தமிழ் சார்ந்த போட்டிகள் நடத்தி கவிஞர் தமிழ்ஒளி பெயரில் பரிசுகள் வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

சமத்துவ சமூகம் மலர வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் தனது படைப்புகளை உருவாக்கிய சமதர்ம கவிஞர் தமிழ் ஒளி அவர்களின் நூற்றாண்டில் அவரின் புகழ் நிலைக்கவும் அவரின் படைப்புகளை அனைவரும் அறிந்திட வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் முதல் அமைச்சர் அவர்களுக்கு நூற்றாண்டு விழாக் குழு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டு விழாக் குழு ‘சிகரம்’ ச.செந்தில்நாதன் - தலைவர், இரா. தெ. முத்து - செயலாளர், வே. மணி - பொருளாளர் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

### திருத்துறைப்பூண்டி நகரில்

# இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் முகாம்!

## மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா பங்கேற்பு!

திருவாரூர்,செப்.21- திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி நகரப் பகுதிகளில் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்க்கும் முகாம் நடைபெற்றது. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன் தலைமையில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா.இளையராஜா முன்னணியில் வீடுகள் தோறும் சென்று இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்க்கும் நிகழ்வு நடைபெற்றது.

மாநில இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழகமெங்கும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்க்கும் முகாம் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக திருவாரூரில் நடைபெற்ற மாவட்ட இளைஞரணி கலைந்தாய்வு கூட்டத்தில் இளைஞரணி மாநில செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே இணைக்கப்பட்ட இளைஞர் அணியினருக்கு தலைமைக் கழகத்தால் வழங்கப்படும் உறுப்பினர் அடையாள அட்டைகளை வழங்கி இளைஞரணி சேர்க்கும் முகாமை தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக மாவட்டம் முழுதும் இளைஞரணி இணைப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன இந்த நிலையில் திருத்துறைப்பூண்டி நகரப் பகுதியில் நடைபெற்ற இல்லம் தோறும் இளைஞரணி சேர்ப்பு முகாம் நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன் தலைமையில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா முன்னிலையில் உறுப்பினர் சேர்க்கும் முகாம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த முகாமில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எஸ்.குமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் வினோத் குமார், எடிசன் மற்றும் நகர இளைஞரணி அமைப்பாளர்கள் வசந்த், கமல், மணிவண்ணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நகரத்தில் உள்ள 24 வார்டுகளுக்கும் சென்று ஒவ்வொரு இல்லங்களிலும் கழகத்தில் இணைக்கப்பட வேண்டிய இளைஞர்களை இணைத்து படிவத்தில் சேர்க்கப்பட்டனர். இந்த இளைஞரணி சேர்ப்பு முகாம் நிகழ்வில் வர்த்தக அணி மாவட்ட துணை அமைப்பாளர் சிக்கந்தர் நகர் மன்ற உறுப்பினர் சக்திவேல் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

# ‘நிறுவனங்களின் நாயகர் கலைஞர்’ புகைப்பட மாடம்!

## எழும்பூர் சிப்காட் தலைமை அலுவலகத்தில் அமைச்சர்கள் டி.ஆர்.பி.ராஜா - பி.கே.சேகர்பாபு திறந்துவைத்தனர்!

சென்னை, செப்.21- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிப்காட் சார்பில் “நிறுவனங்களின் நாயகர் - கலைஞர்” - புகைப்பட மாடம்- சென்னை, எழும்பூரில் உள்ள சிப்காட் தலைமை அலுவலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.

1969-ல் முதல் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்ச ராக பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி திட்டங்களை வடிவமைத்து, இதன் முத்தாய்ப்பாக 1971 ல் சிப்காட் நிறுவனத்தை உருவாக்கினார்.

அதன் தொடர்ச்சியாக 1973ல் இராணிப்பேட்டை, 1974ல் ஓசூர், 1989ல் கடலூர், 1997ல் திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம், 1998ல் இருங்காட்டுக் கோட்டை மற்றும் சிறுசேரி, 2007ல் செய்யாறு விரிவாக்கம், 2008ல் பிள்ளைப்பாக்கம் மற்றும் தேர்வாய்க் கண்டிகை, 2010ல் திண்டிவனம் என்று முத்தமிழறிஞர் கலைஞர் தொடங்கி வைத்த சிப்காட்டின் சகாப்தம் இன்று மாபெரும் வளர்ச்சி அடைந்து, 16 மாவட்டங்களில், 28 தொழில் வளாகங்கள், 6 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் என 38,538 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமாக வளர்ந்து நிற்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்பு கலைஞர் இட்ட சிப்காட் எனும் இந்த சிறுவிதை இன்று 3,142 தொழில் நிறுவனங் களின் நம்பிக்கையை வென்று சுமார் ரூபாய் 1.62 இலட்சம் கோடிக்கும் மேல் முதலீடுகளை ஈர்த்து சுமார் 7.5 இலட்சம் பேருக்கு மேல் வேலைவாய்ப்பை வழங்கி ஆலமரமாக வளர்ந்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளது.

ஏற்றுமதியும், இறக்குமதியும் சரிவிகிதத்தில் நிகழும் பொருளாதாரமே நாட்டின் வளர்ச்சிக்கான பாதை என்பதை கணித்து உலகின் முன்னனி நிறுவனங்களான ஹூண்டாய், கேட்டர் பில்லர், செயிண்ட் கோபைன் போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஊக்கமளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஸ்பிக், அசோக் லேலாண்ட், டைட்டான் போன்ற இந்திய நிறுவனங்கள் உலகளாவிய அளவில் ஏற்றுமதி செய்ய அதற்கான உற்பத்தி வசதி வாய்ப்புகளையும் சிப்காட் வளாகங்கள் மூலம் உருவாக்கினார்.

கலைஞரின் தொலைநோக்கு பார்வையினால் உருவாக்கப்பட்ட சிப்காட் வளாகங்கள் இன்று வாகனம், வாகன உதிரி பாகங்கள், கனரக வாகனம் மற்றும் உபகரணங்கள், வேதிப்பொருட்கள், உணவுப்பொருட்கள், எரிபொருள் சார்ந்த பொருள்கள், உப பொருட்கள், மின்னனு தொழில் சாதனங்கள் மற்றும் தகவல் தொழில் நுட்பக் கருவிகள், ஜவுளித்தொழில் மற்றும் ஆயத்த ஆடைகள், மருந்து பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரண கருவிகள், தோல் பொருட்கள் மற்றும் காலணிகள், வானூர்தி மற்றும் விண்வெளி உதிரி பாகங்கள் உற்பத்தி என ஆயிரக்கணக்கான தொழில் நிறுவனங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது. இது தவிர, சர்வதேசத்தரத்துடன் கலைஞர் அவர்கள் உருவாக்கிய சிறுசேரி சிப்காட் தகவல் தொழில் நுட்ப பூங்கா இன்று பல அயல்நாட்டு நிறுவனங்களின் முதலீட்டுகளை ஈர்த்து, இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கி உள்ளது.

உயரிய இலக்குடன் சிப்காட் நிறுவனத்தை உருவாக்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதற்குரிய உட்கட்டமைப்புகளான சாலைகள், நீராதார வசதிகள், சரக்கு வாகன நிறுத்தங்கள், தகவல் தொழில்நுட்ப இணைப்புகள், விமான நிலையம், இரயில் நிலையம், இலகுவான ஏற்றுமதிக்கு என கடல் சார்ந்த போக்குவரத்து இணைப்புகள் என தமிழ்நாட்டின் சிப்காட் நிறுவனங்கள் எளிதில் உலக வரைப்படங்களுடன் இணையும் வகையில் அனைத்து வசதி வாய்ப்புகளையும் ஏற்படுத்தியுள்ளார்.

கலைஞர் அவர்களின் இந்த ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் தமிழ்நாட்டின் முகங்களை சர்வதேச அரங்கில் தனித்துவமுடன் முன்னிறுத்தியுள்ளது. அவர் தம் வழியில் தற்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞரின் இந்த தொழில் வீச்சை மேலும் மேலும் மெருகேற்றி நவீன தேவைக்கு ஏற்ப கட்டமைத்து வருகிறார்.

- தொழில் முதலீட்டாளர்களுக்கு இலகுவான வாய்ப்புகளை வழங்குவதில் முன்னிலை
- தொழில்வளாகங்கள் வரிசையில் அதிக நிலப் பரப்பு வாய்ப்புகள் கொண்டுள்ளதில் முன்னிலை
- பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டில் முன்னிலை
- உட்கட்டமைப்பு மற்றும் தொழில் சாலைகள் கட்டமைப்பில் முன்னிலை
- எளிய மனிதர்களுக்கு வாய்ப்பளித்து அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு முன் நிற்பதில் முன்னிலை
- அதிக நாடுகளில் இருந்து அபரீதமான முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் முன்னிலை என சிப்காட் தனது பயணத்தில் பல மைல்கற்களை உருவாக்கி வருகிறது.

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களின் அறிவுறுத்தலின்படி, நிறுவனங்களின் நாயகர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட தொழில் நிறுவனங்கள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், பங்கேற்ற விழாக்கள் மற்றும் தொழில் துறை சார்பில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய தொகுப்புகளின் புகைப்படங் களை கொண்ட புகைப்பட மாடத்தை தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (19.09.2023) திறந்து வைத்து, பார்வையிட்டார்கள். அதன் பின்னர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் தொழில் துறையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள், சாதனைகள் குறித்த குறும்படம் வெளியிடப்பட்டது.

இவ்விழாவில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், சிப்காட் மேலாண்மை இயக்குநர் திருமதி எ.சுந்தரவல்லி, டிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெய்ரீ முரளிதரன், சிப்காட் செயல் இயக்குநர் பி. ஆகாஷ், டிட்கோ செயல் இயக்குநர் ஜெயசந்திர பானு ரெட்டி மற்றும் சிப்காட் நிறுவன உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; 19.9.2023 முதல் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நாடாளுமன்றத்தில் கூட்டம் நடைபெறப் போகிறதாமே ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி ; புதிய இடம், புதிய சூழலில் நாடாளுமன்றம் நடைபெறப் போகிறது.**

**பொதுவாக இடம் மாறும்போது மனமாற்றம் வரும் என்று சொல்வார்கள்.**

**ஆனால் எதிலும் ‘ஒரே ஒரே’ என்று ஒற்றைப் பார்வை கொண்ட ஒன்றிய பா.ஜ.க.வினர்க்கு, இடம் மாறினாலும்,எண்ணமும் அணுகுமுறையும் மாறாது.**

**அவர்கள் எப்போதும் போல, “பொய் நீதியும் நேர்மையும் பேசுவர்; தினம் மதமும் பேதமும் கூறுவர்; அது வேதம் விதியென்றோதுவர்”!**

**நாடாளுமன்றத் தேர்தல் வருகிறதல்லவா; பொறுத்திருந்து பார்ப்போம் !**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.9.2023) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வடபழனி, குமரன் காலனி பிரதான சாலைக்கு "மாண்டலின் ஸ்ரீநிவாஸ் முதன்மைச் சாலை" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்காக மாண்டலின் ஸ்ரீநிவாஸ் அவர்களின் தந்தை சத்தியநாராயணா, தாயார் திருமதி காந்தம், சகோதரர் மாண்டலின் ராஜேஷ், அவரது மனைவி திருமதி. ஹர்ஷா ராஜேஷ் ஆகியோர் சந்தித்து, நன்றி தெரிவித்துக் கொண்டனர். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

### திண்டுக்கல் - அம்பிளிக்கை சுரேஷ் மர்ம மரணம்! ஒட்டன்சத்திரம்

# அ.தி.மு.க. நடராஜனின் ஜாமீன் மனு தள்ளுபடி!

## மதுரை உயர்நீதிமன்றக் கிளை உத்தரவு!

திண்டுக்கல், செப்.21-

திண்டுக்கல், அம்பிளிக்கை கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் கடந்த மாதம் மர்மமான முறையில் இறந்ததையடுத்து நடைபெற்று வரும் வழக்கில் தன்னையும் சேர்க்க போலீசார் முயற்சி எனக்கூறி அ.தி.மு.க.வைச் சேர்ந்த நடராஜன் என்பவரின் முன்ஜாமின் மனுவை தள்ளுபடி செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றிய அ.தி.மு.க. செயலாளரும், 2021 ஆம் ஆண்டில் நடந்த சட்டசபை தேர்தலில் தற்போதைய அமைச்சர் அர.சக்கரபாணியை எதிர்த்து ஒட்டன்சத்திரம் தொகுதியில் அ..தி.மு.க. சார்பில் போட்டியிட்டவருமான நடராஜன், தனக்கு முன்ஜாமீன் கேட்டு மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் அவர் கூறியிருந்ததாவது:

திண்டுக்கல் மாவட்டம் அம்பிளிக்கை கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் (வயது 30). கடந்த மாதம் மர்மமான முறையில் இறந்ததாகவும் அவரது உடலை உறவினர்கள் மயானத்தில் வைத்து எரித்துவிட்டதாகவும் கிராம நிர்வாக அலுவலர் போலீசில் புகார் தெரிவித்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து வடிவேலு உள்ளிட்ட சிலரை கைது செய்தனர்.

இந்த நிலையில் சுரேஷ் இறப்பு தொடர்பாக மேலும் சிலர் மீது சந்தேகப்படும் வகையில் போலீசார் விசாரித்து வருகின்றனர். கைதானவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் என்னையும் இந்த வழக்கில் சேர்க்க போலீசார் முயற்சி செய்கின்றனர்.

இது அரசியல் பழி வாங்கும் நடவடிக்கை. இந்த வழக்கில் எனக்கு முன்ஜாமீன் வழங்கி உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி இளங்கோவன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு கூடுதல் குற்றவியல் வக்கீல் பா.நம்பி செல்வன் ஆஜராகி, சுரேஷ் மர்மமான முறையில் இறந்தது குறித்து மனுதாரரிடம் போலீசார் காவலில் விசாரிக்க வேண்டியுள்ளது. எனவே இந்த விவகாரம் தீவிரமானது என போலீசார் கருதுகின்றனர். இதனால் மனுதாரருக்கு முன்ஜாமீன் அனுமதிக்க கூடாது. இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதாடினார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, மனுதாரரின் முன்ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

### நாடாளுமன்ற - சட்டமன்றத்தில்

# மகளிர்க்கு 33 சதவிகித இடஒதுக்கீடு அளிக்கும் மசோதா தாக்கல்!

## நாடாளுமன்ற புதிய கட்டிடத்தில் சிறப்புக் கூட்டம் தொடங்கியது!

புதுடெல்லி, செப்.21-

புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் நேற்று முன்தினம் சிறப்பு கூட்டம் நடைபெற்றது. இந்த புதிய நாடாளுமன்ற மக்களவையில் முதல் மசோதாவாக நாடாளுமன்றம் -சட்டமன்றத்தில் மகளிருக்கு 33 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கும் மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் தொடங்கியது. சிறப்பு கூட்டத்தொடர் வரும் 22ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. சிறப்பு கூட்டத்தொடர் பழைய நாடாளுமன்றக் கட்டிடத்தில் நடைபெற்றது.

இந்நிலையில், புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் நேற்று முன்தினம் சிறப்பு கூட்டத்தொடர் தொடங்கியது. முன்னதாக, பழைய நாடாளுமன்ற கட்டிட மைய வளாகத்தில் நேற்று முன்தினம் அனைத்துக் கட்சி எம்.பி.க்களின் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்பட பல தலைவர்கள் உரையாற்றினர்.

இதனை தொடர்ந்து பழைய நாடாளுமன்ற கட்டிடத்தில் இருந்து பிரதமர் மோடி தலைமையில் அமைச்சர்கள், எம்.பி.க்கள் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்திற்குச் சென்றனர்.

எம்.பி.க்கள் அனைவரும் புதிய நாடாளுமன்றக் கட்டிடம் சென்ற பின் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் சிறப்பு கூட்டத்தொடரின் 2ம் நாள் கூட்டம் தொடங்கியுள்ளது. மக்களவையில் சபாநாயகர் ஓம் பிர்லா சபை நடவடிக்கைகளை தொடங்கி வைத்தார்.

இதையடுத்து புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். பிரதமர் மோடி பேசுகையில், இந்தியாவுக்கு சிறப்பான நேரம் வந்துள்ளது. உலகே வியக்கும் வகையில் ஜி20 மாநாட்டை நடத்தி காட்டியுள்ளோம். விநாயகர் சதுர்த்தியன்று இந்த கூட்டத் தொடரை தொடங்கியிருப்பது சிறப்பானது' என்று பெருமைபொங்க பேசினார்.

இதனையடுத்து புதிய நாடாளுமன்றத்தில் முதல் மசோதாவாக நாடாளுமன்றம் - சட்டமன்றத்தில் மகளிருக்கு 33 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கும் மகளிர் மசோதாவை ஒன்றிய சட்ட அமைச்சர் மக்களவையில் தாக்கல் செய்தார். இந்த மசோதா மீதான விவாதம் நடைபெற்று நிறை வேற்றப்படவிருக்கிறது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின்போது கடந்த 2010ம் ஆண்டு மார்ச் 9ம் தேதி மகளிர் 33 சதவிகித இட ஒதுக்கீடு மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.


தமிழ்நாடு அரசு

**செய்தி-மக்கள் தொடர்பு (விளம்பரம்)த் துறை**

தலைமைச் செயலகம், சென்னை-9

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998-ன் படி தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை வெளியிடும் மாநில மற்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் (State and District Tender Bulletin) ஓர் ஆண்டு அச்சிடும் பணிக்கு இதே போன்று அரசு அல்லது அரசு சார்ந்த அமைப்புகளின் இதழ் அச்சிடும் பணியில் முன் அனுபவம் உள்ளவர்களிடமிருந்து மட்டும் 3.10.2023 பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்த விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 3.10.2023 மாலை 4.00 மணிக்கு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலருக்கான ஒப்பந்த விலைப்புள்ளிகள் சென்னையில் இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, 9வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 9 அவர்கள் அலுவலகத்தில் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

மாவட்டங்களில் ஒப்பந்த விலைப்புள்ளிகள் 38 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் அலுவலகங்களில் 3.10.2023 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பெறப்பட்டு அன்று மாலை 4.00 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களால் திறக்கப்படும்.

மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் அச்சிடும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் இதர விபரங்கள் சென்னையில் "இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, 9வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009" என்ற பெயரில் வங்கியில் பெறப்பட்ட ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாவட்டங்களை பொறுத்தமட்டில் மேலே குறிப்பிட்டுள்ள அந்தந்த **"மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலரின் பெயரில்"** (பதவியின் பெயரில்) வங்கியில் பெறப்பட்ட ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)க்கான (வரிகள் உட்பட) வங்கி கேட்பு வரைவோலையை (Demand Draft) நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்புத்தொகை (EMD) ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) 3.10.2023 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் விற்பனை நிறுத்தப்படும். பணம் ரொக்கமாக பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

செ.ம.தொ.இ./5121/ஒப்பந்தப்புள்ளி/2023 — இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை


### கடலூர் கிழக்கு மாவட்ட

# கழக மகளிர் அணி, தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

கடலூர், செப். 21-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், சிதம்பரம், அறுபத்து மூவர் திருமண மண்டபத்தில், மாலை 4.30 மணியளவில், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் அமுதராணி தலைமையில் நடைப்பெற்றது. மாவட்ட துணை செயலாளர் சுதா சம்பத் வரவேற்புரையாற்றினார்.

கடலூர் மேயர் சுந்தரி ராஜா, பொதுக்குழு உறுப்பினர் மஞ்சுஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்கே. பன்னீர்செல்வம் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினர்.

கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, ஒன்றிய கழகச் செயலாளர்கள் அ.முத்துசாமி முத்து.பெருமாள், கே.ஆர்.ராயர், வி.ஜி.பி.சபாநாயகம், ஆர்.கலையரசன், டாக்டர் எம்.மனோகரன், எம். சோழன், சின்னசாமி, சங்கர், ராஜேந்திரன், மணிவண்ணன், பொதுக் குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், ஜேம்ஸ் விஜயராகவன், பேரூர் கழக செயலாளர்கள் கணேசமூர்த்தி கிள்ளை ரவி, பழனி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அப்பு சந்திரசேகர், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஜாஃபர் அலி, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி தலைவர் கோகிலா குமார்,

மகளிர் அணி தலைவர் லதா, துணை அமைப்பாளர்கள் வெ.மலர்விழி, செ.சங்கீதா, இரா.கௌரி, ஆ.ஜீவா, சோ.லதா, மகளிர்தொண்டரணி தலைவர் பெ.குமாரி, பு.ஜெயசுதா, அமைப்பாளர் மனோரஞ்சிதம், துணை அமைப்பாளர்கள் அ.தரணி, கா.காயத்ரி, த.ராஜகுமாரி, பா.விஜயலட்சுமி, ரா.சாந்தி ராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதிஸ்டாலின் வருகையை முன்னிட்டு நடைபெற்ற பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் அவைத்தலைவர் கே.மனோகரன், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் சத்யமூர்த்தி,ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பிரகாசம், பி.எஸ்.சரவணன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள்,இளைஞர் அணியினர் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் சார்பில், நேற்று முன்தினம் (19.09.2023) சென்னை, எழும்பூர், சிப்காட் தலைமை அலுவலகத்தில், "நிறுவனங்களின் நாயகர் – கலைஞர் தொழில்துறையில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய தொகுப்புகளின் புகைப்படங்களை கொண்ட புகைப்பட மாடத்தை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், சிப்காட் மேலாண்மை இயக்குநர் திருமதி எ.சுந்தரவல்லி, டிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சிப்காட் செயல் இயக்குநர் பி.ஆகாஷ், டிட்கோ செயல் இயக்குநர் ஜெயசந்திர பானு ரெட்டி, மற்றும் சிப்காட் நிறுவன உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா:

# கழக சட்டத் துறை சார்பில் மண்டல வாரியாக பேச்சுப் போட்டிகள்!

## சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பு

சென்னை, செப். 21 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர்அவர்களின் அறிவுரைக்கிணங்க தி.மு.க. சட்டத்துறைச் சார்பில்

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி மண்டல வாரியாக பேச்சுப் போட்டி நடைபெறுகிறது.

இதுகுறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை வருமாறு:-

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி தி.மு.க. சட்டத் துறையின் சார்பில்,சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர் களுக்கான பேச்சு போட்டிகளை கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப் பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமேநடத்தப்படும்.

போட்டிகளுக்கான தலைப்புகள் பின்வருமாறு :

1. கலைஞரின் பார்வையில் சமூக நீதி,
2. கலைஞரின் பார்வையில் மாநிலசுயாட்சி,
3. கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்,
4. கலைஞரின் பார்வையில் தொழில் வளம்,
5. கலைஞரின் பார்வையில் கல்வி.

மேற்சொன்ன இந்த ஐந்து தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பினை போட்டி துவங்குவதற்கு முப்பது நிமிடங் களுக்கு முன்பு போட்டி நடத்தும் நடுவர்கள் அறிவிப்பார்கள். அந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிடவேண்டும். மாநிலம் முழுதும் உள்ள சட்ட கல்லூரிகளை ஆறு மண்டலங்களாக பிரித்து, அந்தந்த மண்டலத்தில் எந்த தேதியில், எந்த ஊரில் போட்டிகள் நடைபெறும் என்பதை கீழே இணைத்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும் முதல் பரிசு ரூபாய் 50,000/ தங்கப் பதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூபாய் 25,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 15,000 / தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 5,000/ வெண்கலப்பதக்கம், சான்றிதழ். வழங்கப்படும்.

ஒவ்வொரு மண்டலத்திலும் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) "மாநில அளவிலான இறுதிப் போட்டி" வருகிற 6.12.2023 (புதன்கிழமை) அன்று நீலாங்கரை, "ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில்" நடைபெறும்.

மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து பங்கு பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலினை, தங்கள் மண்டலத்தின் போட்டி நடைபெறும் நாளுக்குமுன்புகீழே குறிப்பிடப்பட்டுள்ள "பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடம்" ஒப்படைக்க வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் அனுமதி கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 1,00,000/ தங்கபதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூபாய் 50,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 30,000/ தாமிரப்பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 10,000/= வெண் கலப்பதக்கம், சான்றிதழ்.

பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன் (சட்டத்துறை இணைச் செயலாளர் 9840022250), ஜெ. பச்சையப்பன் - (சட்டத் துறை துணைச் செயலாளர் 9840260178 ) கே.சந்துரு - (சட்டத் துறை துணைச் செயலாளர் 9444006999), கே.ஜே. சரவணன் - (தலைமைக் கழக வழக்கறிஞர் 9841057345)

மண்டல வாரியாக பேச்சுப் போட்டி நடைபெறும் தேதி, இடம் ஆகிய விவரங்கள்

30.09.2023 - (மாணவர்கள்)

01.10.2023 - (வழக்கறிஞர்கள்)

அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு (இடம்), டாக்டர்.அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப் பெரும்புதூர், திருவள்ளூர் வட்டம் (ம) மாவட்டம், பி.எஸ். அப்துர் ரஹ்மான் பல்கலைக் கழகம், சென்னை, சவிதா பல்கலைக் கழகம், சென்னை, வேல் டெக் ரங்கராஜன் டாக்டர்.சகுந்தலா ஆர் & டி இன்ஸ்டிட்யூட் ஆப் சயின்ஸ் & டெக்னாலஜி, சென்னை, விநாயகா மிஷன்ஸ் ரிசர்ச் பவுண்டேசன், காஞ்சிபுரம் , சாய் பல்கலைக்கழகம், சென்னை. டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை. பிரிஸ்ட் பல்கலைக்கழகம், புதுச்சேரி வளாகம், புதுச்சேரி

07.10.2023 - (மாணவர்கள்)

08.10.2023 - (வழக்கறிஞர்கள்)

அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இடம்)

எஸ்.தங்கப்பழம், சட்டக் கல்லூரி, தென்காசி (தனியார்) , துளசி பெண்கள் சட்டக் கல்லூரி, தூத்துக்குடி (தனியார்) , முகில், சட்டக் கல்லூரி, கன்னியாகுமரி (தனியார்),

கலசலிங்கம் அகெடமி ஆப் ரிசர்ச் & எஜிகேசன், விருதுநகர்

14.10.2023 - (மாணவர்கள்)

15.10.2023 - (வழக்கறிஞர்கள்)

அரசு சட்டக் கல்லூரி, சேலம் (இடம்)

அரசு சட்டக் கல்லூரி, வேலூர், அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி, அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர், மத்திய சட்டக் கல்லூரி, சேலம் (தனியார்), அரசு சட்டக் கல்லூரி, நாமக்கல்

கேஎம்சி சட்டக் கல்லூரி, திருப்பூர் (தனியார்), ஈரோடு சட்டக் கல்லூரி, ஈரோடு (தனியார்), காருண்யா பல்கலைக் கழகம், கோயமுத்தூர்

21.10.2023 - (மாணவர்கள்)

22.10.2023 - (வழக்கறிஞர்கள்)

அரசு சட்டக் கல்லூரி, மதுரை (இடம்)

அரசு சட்டக் கல்லூரி, காரைக்குடி, அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம், அரசு சட்டக் கல்லூரி, தேனி, பிரிஸ்ட் பல்கலைக்கழக வளாகம், அரசனூர், சிவகங்கை, ஜி.டி.என். சட்டக் கல்லூரி, திண்டுக்கல் (தனியார்)

28.10.2023 - (மாணவர்கள்)

29.10.2023 - (வழக்கறிஞர்கள்)

டாக்டர்.அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம்,

செங்கல்பட்டு மாவட்டம் (இடம்), அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம்

சரஸ்வதி சட்டக் கல்லூரி, திண்டிவனம் (தனியார்), பாரத் பல்கலைக் கழகம், சேலையூர், சென்னை.

செட்டிநாடு அகெடமி ஆப் ரிசர்ச் & எஜிகேசன், கேளம்பாக்கம், சென்னை.

ஹிந்துஸ்தான் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி & சயின்ஸ், சென்னை

சத்தியபாமா இன்ஸ்டிட்யூட் ஆப் சயின்ஸ் & டெக்னாலஜி பல்கலைக்கழகம், ஜேப்பியார் நகர், சென்னை. எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம், காட்டாங்குளத்தூர், காஞ்சிபுரம்

வேல்ஸ் இன்ஸ்டிட்யூட் ஆப் சயின்ஸ், டெக்னாலஜி & அட்வான்ஸ்டு ஸ்டடிஸ் (விஸ்டாஸ்), வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை. வி.ஐ.டி. பல்கலைக் கழகம், வேலூர் (சென்னை வளாகம்)

தமிழ்நாடு டாக்டர்.அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை.

04.11.2023 - (மாணவர்கள்)

05.11.2023 - (வழக்கறிஞர்கள்)

அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி (இடம்)

அன்னை தெரசா சட்டக் கல்லூரி, புதுக்கோட்டை (தனியார்) , சாஸ்த்ரா பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப் பள்ளி., தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி

இவ்வாறு தி.மு.கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தெரிவித்துள்ளார்.





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகையை முன்னிட்டு நடைபெற்ற தருமபுரி கிழக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் மாவட்டக் கழக பொருளாளர் வே.தங்கமணி, மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ஜி. சேகர், மாவட்ட துணைச் செயலாளர்கள் உமாசங்கர், ரேணுகாதேவி, ஆறுமுகம் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள், இளைஞர் அணியினர் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## திருப்பத்தூர் கோ. சண்முகம்

### செப்டம்பர் 21 (2002)



திருப்பத்தூர் நகரச் செயலாளர், மாவட்டக் கழக துணைச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் சிறப்புற பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் ஊராட்சிக்குட்பட்ட கட்டனாச்சம்பட்டி, மூலக்காடு, ஆலாம்பட்டி, பழந்தின்னிப்பட்டி, மாட்டுவேலம்பட்டி, அக்கரைப்பட்டி, மதியம்பட்டி மற்றும் தொட்டிப்பட்டி ஆகிய 8 ஊராட்சிகளில் ரூ. 2.04 கோடி மதிப்பீட்டில் 22 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழக வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் ஆர்.எம்.துரைசாமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் காரை மதுரா கொசபாளையம் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட பகுதி நேர நியாய விலைக் கடையை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்துகுடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். அருகில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளார். ஒன்றிய அவைத் தலைவர் வாசு, பொருளாளர் இக்பால், ஒன்றிய பிரதிநிதி காந்தி, கூட்டுறவு சங்க செயலாளர் நாகப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கிராமத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு

# 100% கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்க முதலமைச்சர் உத்தரவு!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்!

செஞ்சி, செப். 21 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் காரை ஊராட்சி மதுரா கொசபாளையம் கிராமத்தில்புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பு விழா நடைபெற்றது.

ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கவுன்சிலர் மணி முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் கலையரசி வெங்கடேசன் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 7 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட பகுதி நேர நியாய விலை கடையை திறந்து வைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

செஞ்சி தொகுதி முழுவதும் சாலைகள் விரிவாக்கம் பணிகள், பாலங்கள் கட்டும் பணிகள், குடிநீர் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகிறது. மக்களின் ஆதரவுடன் முதலமைச்சரின் வழிகாட்டுதல்படி செஞ்சி தொகுதியில் 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து பகுதி நேர ரேஷன் கடைகள் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் எப்படி சொன்னதை செய்வாரோ அதைப் போல கலைஞரின் மகன்தமிழ்நாடு முதலமைச்சர் சொன்னதை செய்து வருகின்றார் என்று அனைவருக்கும் தெரியும் .

அந்த வகையில் 1 கோடி பேருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என்று சொன்னார் ஆனால் 1 கோடியே 6,50,000 பேருக்கு கலைஞர் உரிமைத்தொகை வழங்க உத்தரவிட்டுள்ளார். மேலும் கிராமத்தில் உள்ள மக்களுக்கு 100% கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கமுதலமைச்சர் உத்தரட்டுள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில்ஒன்றிய அவைத் தலைவர் வாசு, ஒன்றிய பொருளாளர் இக்பால், வார்டு உறுப்பினர்கள் சுமதி வென்னிமலை, சரிதா சிவராமன், ஒன்றிய பிரதிநிதி காந்தி,ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பழனி, செந்தில்குமார், நிர்வாகிகள் ஏழுமலை, நாகப்பன், மணி, சிவகுமார், மாணிக்கம், ஜெயமூர்த்தி,விற்பனையாளர்கள் பிரபு, சிவசங்கர், முனுசாமி , அமலா, முனுசாமி உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். மேல் அருங்குணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் நாகப்பன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் ஒன்றியத்தில்

# 8 ஊராட்சிகளில் ரூ.2.04 கோடி மதிப்பில் திட்டப்பணிகள்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் துவக்கி வைத்தார்!

நாமக்கல், செப். 21 -

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகேயுள்ள வெண்ணந்தூர் ஊராட்சிக்குட்பட்ட கட்டனாச்சம்பட்டி, மூலக்காடு, ஆலாம்பட்டி, பழந்தின்னிப்பட்டி, மாட்டுவேலம்பட்டி, அக்கரைப்பட்டி, மதியம்பட்டி மற்றும் தொட்டிப்பட்டி ஆகிய 8 ஊராட்சிகளில் ரூ. 2.04 கோடி மதிப்பீட்டில் 22 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழக வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், கட்டனாச்சம்பட்டி ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டம் 2023 24 கீழ், அத்திப்பல கானூர் கிராமத்தில் ரூ.16.75 லட்சம் மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் பணி, மூலக்காடு ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2023 24 கீழ், அம்மன் நகர் மெயின் வீதி மற்றும் முதல் குறுக்கு வீதியில் ரூ.20.23 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, சேது நகர் குறுக்கு வீதியில் 5.95 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, மசக்காளிப்பட்டி எரங்காடு குறுக்கு வீதியில் ரூ.3.56 லட்சம் மதிப்பில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, போயர் தெருவில் ரூ.9.37 லட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணி, ஆலம்பட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2023 24 கீழ், அருந்ததியர் தெரு மகளிர் சுய உதவி குழு கட்டடம் முதல் மதுரை வீரன் கோவில் வரை ரூ.8.47 லட்சம் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி உள்ளிட்ட பழந்தின்னிப்பட்டி, மாட்டுவேலம்பட்டி, அக்கரைப்பட்டி, மதியம்பட்டி உள்ளிட்ட ஊராட்சிகளில் ரூ.2.04 கோடி மதிப்பீட்டில் 22 புதிய திட்டப்பணிகளை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், தொட்டிப்பட்டியில் நடைபெற்று வரும் கலைஞரின் வரும் முன் காப்போம் மருத்துவ முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் ஆர். எம்.துரைசாமி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### வேளச்சேரி மேற்குப் பகுதி மாவட்டப் பிரதிநிதி

# சூரியா மணிவண்ணன் தாயார் சி.நவநீதம் மறைவு!

சென்னை, செப். 21 -

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்குப் பகுதி, மாவட்டக் கழகப் பிரதிநிதி சூரியா மணிவண்ணன் தாயார் சி. நவநீதம் அவர்கள் (வயது 88) நேற்று முன்தினம் (19.9.2023) மாலை 4.50 மணி அளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அன்னாரது உடல் மீது மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (20.9.2023) மாலை 3 மணி அளவில் அன்னாரது இல்லமான எண்.48, பாலமுருகன் 1-வது தெரு, விஜய நகரில் இருந்து புறப்பட்டு, தரமணி பாரதிநகர் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### அரசியல் சாசனத்தின் நினைவுகளை அகற்றிவிட்டு

# புதிய நாடாளுமன்றத்தில் சாணக்கியனின் தத்துவம்தான் கோலோச்சுகிறது!

## நாடாளுமன்றத்தில் மார்க்சிஸ்ட் சு.வெங்கடேசன் எம்.பி. பேச்சு!



புதுடெல்லி, செப். 21 -

நூறு ஆண்டுகளுக்கு மேலாக மகத்தான அடையாளமாகத் திகழ்ந்து வரும் புகழ்பெற்ற இந்திய நாடாளுமன்ற கட்டிடத்தில் கடைசிக் கூட்டம் 2023 செப்டம்பர் 18 திங்களன்று நடந்து முடிந்தது. செப்டம்பர் 19 செவ்வாயன்று, மோடி அரசு புதிதாக கட்டியுள்ள நாடாளுமன்ற கட்டிடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெயர்கிறார்கள். இதையொட்டி, நாடாளுமன்றத்தில் திங்களன்று நடைபெற்ற சிறப்பு அமர்வில், கடந்த 75 ஆண்டுகாலமாக இந்த நாடாளுமன்றம் ஆற்றிய மகத்தான பணிகளை நினைவுகூர்ந்து அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களும் உரையாற்றினர். இந்த அமர்வை துவக்கி வைத்து பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் ஆற்றிய உரை வருமாறு:

புகழ்மிக்க நாடாளுமன்றத்தின் 75வது ஆண்டு சிறப்பை நினைவு கூர்கிற இந்த தருணத்தில் இந்தியாவின் வலிமைக்கும் செழுமைக்கும் காரணமாக இருந்த இந்த அவையில் பங்களிப்பு செய்த அனைவரையும் வணங்கி மகிழ்கின்றேன். அரசியல் சாசனத்தை நிறைவேற்றிய நம்முடைய முன்னோர்க ளின் குரல் எதிரொலித்த அவை இது. ஆங்கிலேயர்களிடமிருந்து அதிகாரத்தை கைமாற்றிய பொழுது "விதியோடு ஓர் ஒப்பந்தம் செய்கிறோம்" என்ற ஒரு புகழ்மிக்க உரையை ஜவஹர்லால் நேரு நிகழ்த்திய அவை இது. இந்த அவையினுடைய மேன்மை இந்த கட்டிடத்தையோ, இந்த கட்டிடக்கலையையோ, இந்த கட்டிடத்தின் பொறியியலையோ சார்ந்ததல்ல; இந்த கட்டிடத்தின் மேன்மை இந்த அவை எடுத்த முடிவுகள் சார்ந்தது. அந்த முடிவுகளில் பின்பற்றப்பட்ட கோட்பாடுகள், தத்துவங்கள் சார்ந்தது.

### கம்யூனிஸ்ட்டுகளின் மகத்தான பங்களிப்பு!

இந்த அவை தான் மொழி வழி மாநிலங்களை உருவாக்கியது; இந்த அவை தான் மன்னர் மானியத்தை ஒழித்தது; இந்த அவைதான் பொதுத்துறை எனும் நவீன கோவில்களை உருவாக்கியது; வங்கிகள் தேசியமயம், இன்சூரன்ஸ் தேசியமயத்தை உருவாக்கியது; ஏக போகத்திற்கு கட்டுப்பாடுகள் விதித்தது; உள்ளாட்சிக்கு கூடுதல் அதிகாரம் வழங்கியது, மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டம், தகவல் உரிமைச் சட்டம் ஆகியவற்றைக் கொண்டு வந்தது. இந்த சட்ட வடிவங்கள் அனைத்திற்கும் பின்னால் அவைக்கு உள்ளேயும் வெளியேயும் போராடிய கம்யூனிஸ்டுகளின் மகத்தான பங்களிப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

நாடாளுமன்றத்தின் வாசலில் ஒரு வாக்கியம் இருக்கிறது: "ஒடுக்குமுறைக்கு ஆளாகி இருக்கிறயாராக இருந்தாலும் அவர்கள் இந்தியாவை தங்கள் இல்லமாக கருதலாம்" என்று எழுதி வைத்திருக்கிறார்கள். எவ்வளவு உயர்ந்த சிந்தனை! இந்த தேசம் உலகத்திற்குச் சொல்ல நினைக்கிற ஒரு சிந்தனை. இந்தச் சிந்தனையை உருவாக்கிய நம்முடைய முன்னோர் களின் நினைவுகள் சூழ்ந்த ஒரு அவை இது.

### சமத்துவ இந்தியா எனும் கனவு

அரசியல் சாசனத்தின் அமர்வுகள் 1083 நாட்கள் நடந்தன. அந்த விவா தங்களினுடைய நினைவுகள் சூழ்ந்து இருக்கின்ற ஓர் அவை இது. அரசியல் சாசனத்தினுடைய குறிப்பு கள் எழுதப்பட்ட ஏடுகளிலே நம்முடைய முன்னோர் கள் எல்லா மொழியிலும் கையெழுத்திட்டு இருக்கிறார்கள். ஆங்கிலத்தில், உருதுவில், இந்தியில், சமஸ்கிருதத்தில், தமிழிலும் கையெழுத்திட்டு இருக்கிறார்கள். மு. சி. வீரபாகு அவர்கள் தமிழிலே கையெழுத்திட்டு இருக்கிறார். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், பன்முகப்பட்ட இந்தியா அனைத்து மொழிகளுக்குமான சமத்துவ இந்தியா தான் நம்முடைய முன்னோர்கள் கண்ட கனவினுடைய அடிப்படை.

### பகத்சிங்கின் கர்ஜனை எதிரொலிக்கிறது!

இந்த அவை அரசியல் சாசனத்தின் நினைவுகள் மட்டுமல்ல.. விடுதலைப் போராட்டத்தினுடைய தழும்புகள் நிறைந்த ஒரு அவை. பகத்சிங் கர்ஜித்த எதிரொலி இந்த அவை முழுவதும் இந்த அரங்கம் முழுவதும் படிந்துள்ளது. அண்ணல் காந்தி, அம்பேத்கர், நேரு என்று மகத்தான தலைவர்களின் சிலைகளும் உருவங்களும் நிறைந்து இருக்கிற அவையை விட்டுவிட்டு நாம் ஒரு புதிய கட்டடத்திற்கு செல்ல இருக்கின்றோம். அரசியல் சாசனத்தின் நினைவுகளை அகற்றிவிட்டு சாணக்கியனின் உருவம் பொறித்த ஒரு இடத்திற்கு இந்தியா கொண்டு செல்லப்பட இருக்கிறது.

### நாம் எங்கே நகர்கிறோம்?

சாணக்கியனுக்கும் ஜனநாயகத்திற்கும் என்ன சம்பந்தம்? தனது முதல் பொதுத் தேர்தலிலே அனைவருக்கும் வாக்குரிமை கொடுத்த ஓர் அவை இந்த அவை. உலகத்தின் பல நாடுகள் நூற்றாண்டு களாக கண்ட கனவை தனது முதல் தேர்தலிலேயே நிறைவேற்ற முடிவு எடுத்த இந்த அவையிலிருந்து, முடியாட்சியின் கொடூர தத்துவத்தை வார்த்தைகளால் வடித்த சாணக்கியனின் முழு உருவச்சிலை வைத்திருக்கிற ஒரு அவை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோம். நண்பர்களே, இங்கே எல்லாம் விடுதலைப் போராட்டத்தின் நினைவுகளாக இருக்கிறது என்றால் அந்த கட்டிடத்தில் எல்லாமே புராணங்களின் வார்ப்புகளாக இருக்கின்றன. இந்தியா எங்கே செல்கிறது என்பது மிக முக்கியமான ஒரு கேள்வி. இங்கே குறிப்பிட்டார்கள், படிக்கட்டை நாங்கள் தொட்டு வணங்கி உள்ளே வந்தோம் என்று.! இருக்கலாம், ஆனால் இங்கே இருந்து வெளியே செல்கிற பொழுது எதை விட்டு விட்டுச் செல்கிறீர்கள்? எத்தனையோ பிரதமர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள்; எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பதில் சொல்லி இருக்கிறார்கள்; விவாதங்களில் பங்கெடுத்து இருக்கிறார்கள்; காது கொடுத்து கேட்டிருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு ஒருமுறை கூட பதில் அளிக்காத ஒருவர் என்கிற நினைவைத் தானே இந்த அவையிலே நீங்கள் விட்டுவிட்டுச் செல்கிறீர்கள்!

### மக்கள் காப்பார்கள்!

இந்த தேசத்தின் பல பிரச்சினைகளுக்கு இந்த அவை முடிவு கட்டி இருக்கிறது

கடந்த காலத்தில்..! ஆனால் சமீப காலத்தில் இந்த தேசத்தின் பல பிரச்சனைகள் இந்த அவை யிலே இருந்துதான் துவங்குகிறது என்ற வருத்த மும் வலியும் சூழ்ந்து இருக்கிறது. நாடாளுமன்றம் என்பது புதிய கட்டிடம் அல்ல, அது பின்பற்றுகின்ற கோட்பாடுகளும் ஜனநாயகத்திற்கு அளிக்கப்படுகின்ற மதிப்பிலும் தான் அதன் உயிர் இருக்கிறது. அந்த உயிரை நீங்கள் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கையில் அல்ல... 140 கோடி மக்களும் காப்பாற்றுவார்கள் என்று நம்பிக்கையோடு புதிய அரங்கை நோக்கி நாங்கள் அடி எடுத்து வைக்கிறோம்.

இவ்வாறு சு.வெங்கடேசன் எம்.பி. உரையாற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேடப்பட்டி இரா. முத்தையா
### செப்டம்பர் 21 (2022)



திராவிடக் கொள்கையில் தீவிர பற்றுக் கொண்ட இவர், தனது மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் இணைந்து தீவிர கழகப் பணியாற்றினார்.


மதுரையில் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நான்குமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். அத்துடன் – தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவராகவும், ஒன்றிய அமைச்சராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா. மீனாட்சிசுந்தரம்
### செப்டம்பர் 21 (2020)



1954ல் தனது 17வது வயதில் கழகத்தில் இணைத்துக் கொண்ட தீவிர சுயமரியாதைக்காரர்.

1970ல் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், ஆலத்தம்பட்டி கிளைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர், நாகை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவராக – நகர்மன்றத் தலைவராக – 1971, 1977, 1984 ஆகிய மூன்று முறை வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1965–ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை புகுந்தவர். 1976ஆம் ஆண்டு மிசா காலத்தில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "மா.மீ" என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். "எப்போதும் கருப்புத் துண்டு அணிந்து கம்பீரமாக உலவிய மா.மீ. அவர்கள் கழகத்தினரிடமும் பொதுமக்களிடமும் மிகுந்த நன்மதிப்புப் பெற்றிருந்தவர்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


கலைஞர்
100
1924 - 2023
நாள் : 21 – 9 – 2023,
வியாழக்கிழமை
மதுரை மாநகர்
மாவட்டத்திற்கு வருகை தரும்
தோல்விகள் உம்மிடம்
தோல்வி அடைகின்றன!
வெற்றிகள் உம்
விலாசம் தேடுகின்றன......
கழக இளைஞர் அணிச் செயலாளர்
இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதிஸ்டாலின்
அவர்களே
வருக.. வருக...
மாண்புமிகு P.T.R. பழனிவேல் தியாகராஜன்
தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்
உயிருள்ளவரை
உங்கள் வழியில்....
அதலை செந்தில் M.A.
கழக மாணவர் அணி துணைச் செயலாளர்

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **இலவச பஸ் பாஸ்.**



# 36 இடம் பொருள் கலைஞர்



# இலவச பஸ் பாஸ்

## கல்வியை நெருக்கமாக்கிய தொலைநோக்கு!



அன்றெல்லாம் தனியார் பேருந்துகள்தான் இருந்தன. அதுவும் பெரும்பாலும் நகரங்களில். அதுவும் எந்த வழித்தடங்களில் பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்குமோ அந்த வழித்தடங்களில் மட்டும்தான் பேருந்துகள் இயங்கும். அதிலும் காலையும் மாலையும் மட்டும்தான் பேருந்து வசதி இருந்தது.

கிராமங்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். சாதிக் கட்டமைப்பு இறுகிப் போயிருந்த அந்தக் காலகட்டத்தில் பேருந்துகள் சில கிராமங்களுக்குப் போகும், சில கிராமங்களுக்குப் போகாது.

இப்படியான சூழலில்தான் முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வராக இருந்த 1971-1976 காலகட்டத்தில் பேருந்துகளை அரசுடைமையாக்கி, போக்குவரத்துக்கு எனத் தனித்துறை ஒன்றையும் ஏற்படுத்தினார். 1973-இல் தமிழ்நாடு பொதுப் பேருந்துகள் மற்றும் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டம் என்கிற சட்டத்தின் கீழ், எந்தெந்த மாவட்டங்களில் பேருந்துகள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனவோ அங்கெல்லாம் முதலில் அரசுடைமை நடவடிக்கையை அமல்படுத்தி, பிறகு அடுத்தடுத்து ஏறுவரிசையில் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று ஐந்தாண்டுகளில் அரசுடைமையாக்கலை முழுமைப்படுத்துவது எனத் திட்டமிடப்பட்டது. அவ்வாறு பேருந்துகள் அரசுடைமையாக்கப்பட்ட முதல் மாவட்டம் நீலகிரி மலை மாவட்டமாகும்.

### பேருந்து அரசுடைமையானதன் பயன்!

இவ்வாறு பேருந்துகள் அரசுடைமையானதன் பயன் என்னவென்று பார்த்தால், தமிழ்நாட்டின் எந்த மூலைக்கும் நாம் இன்று 12 மணி நேர இடைவெளியில் சென்றுவிட முடியும் என்கிற வசதி. ஆனால், அது மட்டுமேதான் பயனா என்றால் இல்லை.

உள்ளடங்கிய கிராமப்புறங்களுக்கும் தொடர்பு வசதி, விரிவடைந்த வணிகம், உருவான புதிய சந்தைகள், அதனால் ஏற்பட்ட வேலைவாய்ப்பு, பணிக்குச் சென்று வர பாதுகாப்பான சூழல், அரசுக்கு நிதிச்சுமை இல்லாமை எனப் பல நன்மைகள் அரசுடைமையால் கிடைத்தன. அதிக வரி வருவாயும் கிடைத்ததால், இதர மாநிலங்களை ஒப்பிடும்போது நல்ல லாபத்தையும் ஈட்டி வருகிறது.

மேலும் இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் அரசுப் பேருந்துகள் இருப்பதும், குறைந்த பயணக் கட்டணம் இருப்பதும் தமிழ்நாட்டில்தான். தவிர, இந்தத் துறையின் மூலம் கிடைத்த லாபத்தைக் கொண்டு தொடக்கக் காலங்களில் ஒரு பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, 3 பாலிடெக்னிக்குகள் கூட உருவாக்கப்பட்டன.

### கல்வியை நெருக்கமாக்கிய 'பாஸ்'

முன்பு கிடைத்தற்கு அரிதாக இருந்த கல்வியை, அடித்தட்டு மக்களுக்குக் கிடைக்கக் காரணமாக இருந்தது, ஒன்றாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை மாணவர்களை ஃபெயில் ஆக்கக் கூடாது என்ற 'ஆல் பாஸ்' கொள்கை மட்டுமல்ல... கல்வி கற்பதற்காக மேற்கொள்ள வேண்டியிருந்த பயணத் தூரத்தையும், பயணச் செலவையும் குறைத்த 'இலவச பஸ் பாஸ்' திட்டமும்தான்.

"இந்தியாவில் எந்த மாநிலமும் நிறைவேற்றாத புரட்சிகரமான திட்டங்களில் ஒன்றாக அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் ஏழை எளிய மாணவ-மாணவியர் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் செல்வதற்கு தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய 'இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்' 1989-1990 கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தினால் 7லட்சத்து 19ஆயிரத்து 689 மாணவர்கள் பயனடைந்ததாகக் **'கலைஞர் செதுக்கிய தமிழகம்'** நூலின் ஆசிரியர் புலவர் முத்து வாவாசி தெரிவிக்கிறார்.

**வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாடு முதல் வகுப்பில் 'பாஸ்' ஆகக் காரணம் இந்த இலவச பஸ் 'பாஸ்' என்றால் மிகையில்லை!**

அந்தக் காலகட்டத்தில், அரசு அங்கீகாரம் பெற்ற உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஆகியோர் அரசுப் பேருந்துகளில் சென்னை, குமரி மாவட்டங்களில் 50 சதவிகிதச் சலுகைகள் கட்டணத்திலும் மற்ற மாவட்டங்களில் 33.3 சதவிகிதச் சலுகைக் கட்டணத்திலும் பயணம் செய்ய அனுமதிக்கப் பட்டனர். 1990-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் எல்லா மாவட்டங்களிலும் 50 சதவிகித சலுகைத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. போலவே, மாலை நேரக் கல்லூரி மாணவர்கள் அனைத்து வழித் தடங்களிலும் செல்லும் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்வதற்கு அளிக்கப்பட்டிருந்த 33.3 சதவிகித கட்டணச் சலுகை, 50 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது.

### 'மகனுக்காக அல்ல... மாணவர்களுக்காக...'

பிறகு 1996-ஆம் ஆண்டு ஜூலை 16 -ஆம் தேதி, 1996-1997 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது, அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், "1989-91 ஆம் ஆண்டுகளில் கழக அரசு ஆட்சியில் இருந்தபோது, எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்வதற்கான சலுகை அளிக்கப்பட்டது. இச்சலுகையைப் பத்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கும் இந்த ஆண்டு முதல் நீட்டிக்கப்படும்" என்று கூறியிருந்தார்.

பின்னர் ஜூலை 25-ஆம் தேதி, அந்த நிதிநிலை அறிக்கை மீதான விளக்கத்துக்குப் பதிலளித்து, சட்டமன்றத்தில் கலைஞர் அவர்கள் உரையாற்றும்போது, "மற்றொரு வேண்டுகோள் உறுப்பினர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வைக்கப்பட்டு, பேராசிரியர் தீரன், பழனிச்சாமி, திருநாவுக்கரசு, எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோராலும் வழிமொழியப்பட்ட ஒன்று. ஆனால், பத்து கோடி ரூபாய் அதிகமாகும். பத்தாவது வரையிலே படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் என்று இருந்தது. அதைப் பிளஸ்-2 வரையில் ஆக்க வேண்டும் என்று உறுப்பினர் ஸ்டாலின் சொல்லி, எதிர்க்கட்சித் தலைவர் அவையிலே வழிமொழிந்தார் உங்களின் காரணத்தால் மகனுக்காக அல்ல - அவை உறுப்பினர்களுக்காகவும் மாணவர்களுக்காகவும் உங்கள் அத்தனை பேர்களுடைய வேண்டுகோளை ஏற்று, பிளஸ்-2 வரையிலே இலவச பஸ் பாஸ் மாணவர்களுக்கு வழங்கப்படும்" என்று தெரிவித்தார்.

2006-ஆம் ஆண்டு வரை, அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்குச் சலுகைக் கட்டணத்தில்தான் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டன. ஆனால், 2007-2008 கல்வியாண்டு முதல் கலைஞர் அரசால் இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் தொடங்கிய இந்தத் திட்டம் இன்றும் தொடர்கிறது. இத்திட்டத்தினால் பள்ளி, கல்லூரிகளில் சேரும் மாணவர் விகிதம் அதிகரித்துள்ளது. மாறி வரும் சூழலுக்கு ஏற்ப கலைஞர் சிந்தித்ததன் விளைவாக மாற்றுத் திறனாளிகள், மூத்தக் குடிமக்கள், எய்ட்ஸ் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கும் கட்டண சலுகையில் பஸ் பாஸ் என்று விரிந்து, இன்று மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணம் என்று வளர்ந்திருக்கிறது.

ஆம்... வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாடு முதல் வகுப்பில் 'பாஸ்' ஆகக் காரணம் இந்த இலவச பஸ் 'பாஸ்' என்றால் மிகையில்லை!

**...வலம் வருவோம்**

## கேரள அமைச்சருக்குத் தீண்டாமைக் கொடுமை!

"அண்மையில் பையனூர் கோயில் விழாவில், அமைச்சர் என்ற முறையில் பங்கேற்றேன். சிவன் கோயில் நடைப்பந்தலை நான் திறந்து வைத்தேன். அப்போது குத்துவிளக்கு ஏற்றுவதற்கான தீபத்தை அர்ச்சகர் என் கையில் தராமல் தரையில் வைத்துச் சென்றார். நான் அந்த தீபத்தைத் தரையில் இருந்து எடுத்து ஏற்ற வேண்டும் என அவரது சாதி நம்பிக்கையின் அடிப்படையில் செய்தார். அதிகாரிகள் பின்னர் அந்த தீபத்தை எடுத்து என் கையில் கொடுத்த போதும் நான் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டேன். நான் குத்துவிளக்கு ஏற்றவில்லை. என்னுடன் வந்த சட்டமன்ற உறுப்பினரும் குத்துவிளக்கு ஏற்றவில்லை.

மீன் வியாபாரிகள், கசாப்புக் கடைக்காரர்களின் கைகளில் கைமாறி வரும் பணத்தில் தீண்டாமை பார்க்காத கோயில் அர்ச்சகர்கள் அந்த மக்களிடம் தீண்டாமைக் கொடுமையைக் கடைப்பிடிக்கிறார்கள். மக்களை எங்கே எப்படிப் பிரித்து வைப்பது நடத்துவது, என்பது சாதிக் கட்டமைப்பைப் பேணுகிறவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. காரணம், சாதிக் கட்டமைப்பை உருவாக்கியவர்கள், மற்ற சாதியினரை விட தங்கள் சாதியார் உயர்ந்தவர்கள் என நினைக்கிறார்கள். ஒவ்வொரு சாதியினரும் தங்களுக்குக் கீழ் உள்ள சாதியினரை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என நினைக்கிறார்கள்".

**-கேரள மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ராதாகிருஷ்ணன்.**

## ஃப்ளாஷ்பேக்



### வாழ்த்தும் அறிவுரையும்!

நான் 17 வயதிலிருந்தே கட்சிக்காக என்னை ஒப்புவித்துக் கொண்டவன். பல்வேறு போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றுள்ளேன். 1997-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்த தளபதி அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தார். இன்றைய சட்டத்துறை அமைச்சர் அண்ணன் ரகுபதி அவர்களும் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றார். அப்போது தளபதி அவர்களுக்கு சால்வை அணிவித்து, வாழ்த்துத் தெரிவித்தேன். என்னைப் பற்றி விசாரித்துச் சிறப்பாகக் கழகப் பணியாற்றுமாறு அறிவுறுத்தினார்..



தங்கராஜ்

**-தங்கராஜ், முன்னாள் கிளைப் பொருளாளர், புதுக்கோட்டை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி :
அன்பகம், 614, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018.
வாட்ஸ்அப் எண்: 90033-24473,
மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணா கண்காணிக்கிறார்!

**1970-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியைக் குறித்து 'கேரவன்' இதழ் புகழ்ந்து எழுதியது. "46 வயது நிரம்பிய தமிழ்நாடு முதலமைச்சர், திறமைமிக்க நுட்பவாதி என்பதை நிரூபித்து விட்டார். அண்ணாவின் புகழும் பெருமையும் மங்காதிருக்குமாறு காத்து வருகிறார். அண்ணா நமது எல்லா செயல்களையும் கண்காணித்து வருகிறார் என்ற உணர்வையே அவர் ஏற்படுத்தி வருகிறார். அமைச்சர்களின் சிறப்பியல்பு என்னவெனில், அவர்கள் ஒரே குரலில் பேசுகிறார்கள் என்பதுதான்" என கலைஞரின் ஆட்சியைப் புகழ்ந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 247




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131